03.10.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## மேட்டூர் அணை நீர்மட்டம் 4 டி.எம்.சி., உயர்வு

நீர்வரத்து காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம், ஒரு வாரத்தில், 4 டி.எம்.சி., உயர்ந்துஉள்ளது.டெல்டா மாவட்டங்களில் சம்பா, தாளடி சாகுபடிக்காக, ஆக., 9ம் தேதி முதல் மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ளது. கர்நாடகாவில் இருந்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து திடீரென குறைந்தது. இதனால், அணையின் நீர்மட்டமும் வேகமாக சரிந்தது.

பாசனத்துக்காக, ஆக., 9ம் தேதி, அணையை திறந்த போது, நீர் இருப்பு, 60 டி.எம்.சி.,யாக இருந்தது. ஆக., 25ம் தேதி, நீர் இருப்பு, 29 டி.எம்.சி.,யாக குறைந்தது. இந்நிலையில், கர்நாடகாவில் இருந்தும், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையாலும், நீர்வரத்து அதிகரித்துள்ளது. வினாடிக்கு, 13 ஆயிரம் கன அடி நீர் வருகிறது. இப்போது அணையில், 33.2 டி.எம்.சி., நீர் இருப்பு உள்ளது. நீர்வரத்து அதிகரித்ததால், ஒரு வாரத்தில், அணையின் நீர்மட்டம், 4 டி.எம்.சி., அதிகரித்துஉள்ளது. அணையில் இருந்து, பாசனத்துக்காக வினாடிக்கு, 10,600 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

## இயற்கை விவசாயத்தில் சாதித்த கலைவாணி; 4 கி.மீ.,க்கு 384 ஆலமரம் நட்ட திம்மக்கா: மதுரை தந்த அங்கீகாரம்




மதுரை,: ஈரோடு இயற்கை விவசாயி கலைவாணி, கர்நாடகா நெடுஞ்சாலையில் ஆலமரங்கள் நட்டு பராமரித்த 105 வயது மூதாட்டி திம்மக்கா உட்பட மூவருக்கு, சாதனையாளர்கள் விருது மதுரையில் வழங்கப்பட்டது.தானம் அறக்கட்டளையின் ககூவது ஆண்டு விழா நடந்தது. நிர்வாக இயக்குனர் வாசிமலை தலைமை வகித்தார். இயற்கை விவசாயி ஈரோடு வெள்ளித்திருப்பூர் கலைவாணி, கர்நாடகா நெடுஞ்சாலைகளில் ஆலமரங்கள் நட்டு சாதனை புரிந்த க0ரு வயது சாலுமாராட திம்மக்கா, ஒடிசா சமூக சேவகர் கபியசில்பி சர்பேஸ்வர் தாஸ் ஆகியோருக்கு 'சமூக மேம்பாட்டு சாதனையாளர்கள்' விருது வழங்கப்பட்டது. மகாராஷ்டிரா தகவல் கமிஷனர் தாங்க்சை பிரான்சிஸ் தெக்கெக்கரா, ஊராட்சி சட்டங்கள் ஆய்வாளர் வள்ளிநாயகம் பங்கேற்றனர்.கலைவாணி கூறியதாவது:சேலத்தில் லாரி உரிமையாளர் சங்கத் தலைவர் மகளாக பிறந்தேன். டாக்டர் கனவுடன் படித்தேன். பத்தாம் வகுப்பு படிக்கும்போது, விவசாய குடும்பத்தை சேர்ந்த ஆறுமுகத்திற்கும், எனக்கும் திருமணம் நடந்தது. கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தோம். எனக்கு விவசாயம் என்றால் என்னவென்றே தெரியாது. வீட்டில் உள்ளவர்களுக்கு சமைக்க மட்டும் தெரியும். எனக்கு ௩ குழந்தைகள். திடீரென குடும்ப சொத்தை பிரிக்க வேண்டிய நிலை. என் கணவர் இறந்தார். எங்களுக்குரிய பங்கு நிலத்தை தர மறுத்தனர். பலகட்ட போராட்டங்களுக்கு பின், எனக்குரிய ௫ ஏக்கர் நிலத்தை மீட்டெடுத்தேன். உறவினர்கள் உதவி செய்ய முன்வரவில்லை.

தமிழ்நாடு வேளாண் பல்கலையில் தபால் வழியில் ஒன்றரை ஆண்டுகள் விவசாயம் படித்தேன்.

தொண்டு நிறுவனத்தினர் விவசாயத்தில் பயிற்சி அளித்தனர். மைராடா தொண்டு நிறுவன நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியால் வெள்ளி திருப்பூரில் முதன்முதலாக, ருசென்ட் நிலத்தில் செம்மை நெல் சாகுபடி செய்தேன்.

சொட்டு நீர் பாசனம் அமைத்து, வரப்போரங்களில் உளுந்து நடவு செய்தேன். இதை பார்த்தவர்கள்,' இந்தம்மாவிற்கு புருசன் செத்த பிறகு புத்தி மாறிப்போச்சு,' என்றனர். வயலில் பசுமை தாண்டவமாடியது. நெல் மணிகளை பார்த்து ஊரே ஆச்சரியமடைந்தது.ரசாயன உரங்கள் மூலம் சாகுபடி செய்தால், ஏக்கருக்கு எ குவிண்டால் பருத்திதான் கிடைக்கும். ஆனால் இயற்கை உரங்களை பயன்படுத்தி பருத்தி சாகுபடி செய்து, கரு குவிண்டால் மகசூல் பெற்றேன். இதற்காக சந்திராயன் விஞ்ஞானி மயில்சாமி

அண்ணாதுரையிடம் பரிசு பெற்றேன். இதனால் தற்போது, எங்கள் ஊரில் அ00 பேர், 2000 ஏக்கரில் இயற்கை விவசாயம் செய்கின்றனர். ஈரோடு இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு தலைவியாக உள்ளேன். தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகா, கேரளாவில் இயற்கை விவசாயம் பற்றி பயிற்சியளிக்கிறேன் என்றார்.

சாலுமாராட திம்மக்கா: நான் கர்நாடகா ராமநகர் மாவட்டம் ஹூலிக்கால் கிராமத்தை சேர்ந்தவள். ஹூலிக்கால் முதல் குதுார் வரை 4 கி.மீ., துார நெடுஞ்சாலையில் 384 ஆலமரங்களை நட்டு பராமரித்தோம். எனது கணவர் உறுதுணையாக இருந்தார். எங்களின் சொந்த பணம் மூலம் இப்பணியை செய்தோம். கணவர் இறந்துவிட்டார். தற்போது மரங்கள் பராமரிப்பை கர்நாடக அரசு செய்கிறது.

மரங்கள் நட்டதற்கு அங்கீகாரமாக 'தேசிய குடிமகன் விருது' உட்பட பல்வேறு விருதுகள் கிடைத்தன. எனக்கு வயதாகிவிட்டதால், வளர்ப்பு

மகன் உமேஷ் மரங்கள் நடும் பணியில் ஈடுபட்டுள்ளார். அவர் இதுவரை ஒரு லட்சம் பல்வேறு வகை மரக்கன்றுகளை நட்டுள்ளார் என்றார். கபியசில்பி சர்பேஸ்வர் தாஸ் ஒரு மாற்றுத்திறனாளி. ஒடிசாவில், சுதந்திரப் போராட்ட வீரர்களைக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். சமூக சேவையில் ஈடுபாடு கொண்டவர்.
ககூகூகூல் ஒடிசாவை தாக்கிய சூப்பர் புயலுக்கு பின், தனது பேரிடர் மேலாண்மை பணியை துவக்கியவர். புயலின் பாதிப்பிலிருந்து பலரை காப்பாற்றியுள்ளார். ஒடிசா முதல்வரிடமிருந்து, புயல் பாதுகாப்பு முகாம் பராமரிப்பிற்கான சிறந்த செயலர் விருது உட்பட பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார்.

## 50 அடியை நெருங்குகிறது வைகை அணை



ஆண்டிபட்டி:வைகை அணை நீர் மட்டம் இந்த ஆண்டில் மீண்டும் 50 அடியை நெருங்கி உள்ளது.வைகை அணை நீர் மட்டம் கடந்த ஆண்டு 55 அடி வரை மட்டுமே உயர்ந்தது. அணை நீர் மட்ட மொத்த உயரம் 71 அடி. வைகை அணையில் இருப்பில் இருந்த நீர், தொடர்ந்து பாசனம் மற்றும் குடிநீருக்கு பயன்படுத்தப்பட்டதால், அணையின் நீர் கடந்த ஏப்ரலில் 35 அடியாக குறைந்து, குடிநீருக்கே பாதிப்பு ஏற்படும் சூழல் ஏற்பட்டது.

ஏப்ரல், மே மாதங்களில் பெய்த கோடை மழை கை கொடுத்ததால், கோடையில் அணைக்கு நீர் வரத்து ஏற்பட்டது. பெரியாறு அணையில்

இருந்து தேனி மாவட்டத்தின் பாசனத்திற்கு திறக்கப்பட்ட நீரில் குறிப்பிட்ட அளவு வைகை அணையில் சேர்ந்தது. இதனால் அணை நீர் மட்டம் ஜூலை 13ல் 50 அடியை கடந்தது. ஜூலை 15ல் மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் முதல் போக பாசனத்திற்கு திறக்கப்பட்டதால், வைகை அணை நீர் மட்டம் செப்டம்பர் 27ல் மீண்டும் 40.68 அடியாக குறைந்தது. கடந்த சில நாட்களாக தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதனால் போடி கொட்டக்குடி ஆறு, தேனி முல்லை ஆறு, வருஷநாடு வைகை ஆறுகளில் நீர் வரத்து ஏற்பட்டு வைகை அணைக்கு நீர் வருகிறது. இதனால் அணை நீர் மட்டம் தொடர்ந்து உயர்கிறது. இந்த ஆண்டில் அணை நீர் மட்டம் 2வது முறையாக 50 அடியை நெருங்கி உள்ளது.

நேற்று மாலை அணை நீர் மட்டம் 49.05 அடியாக இருந்தது. அணைக்கான நீர் வரத்து வினாடிக்கு 1796 கன அடியாகவும், அணையில் இருந்து மதுரை, ஆண்டிபட்டி- சேடபட்டி குடிநீருக்காக வினாடிக்கு 60 கன அடியும் வெளியேற்றப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 1842 மில்லியன் கன அடியாக இருந்தது.

## நீர் நிலைகளில் கனிமம் எடுக்க அனுமதி கலெக்டர் தலைமையில் குழு அமைப்பு

சென்னை: 'நீர் நிலைகளில், சிறு கனிமங்கள் எடுக்க, கலெக்டர் தலைமையிலான குழுவிடம் அனுமதி பெற வேண்டும்' என, அரசு அறிவித்துள்ளது.தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதியில், சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுஉள்ளது. அதன்படி, பொதுப்பணித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள நீர் நிலைகளில், வண்டல், சவுடு, கிராவல் போன்ற கனிமங்கள் எடுக்க வேண்டும் என்றால், தாசில்தார் கருத்துரு தயார் செய்து கலெக்டருக்கு அனுப்ப வேண்டும்.கலெக்டர் அப்பட்டியலை, பொதுப்பணித் துறை

நிர்வாக பொறியாளருக்கு அனுப்புவார். அவர் எந்த அளவு கனிமம் எடுக்கலாம் என, அறிக்கை தயார் செய்வார். வேளாண் பணி களுக்காக, பொதுமக்கள் இலவசமாக கனிமம் எடுத்துக் கொள்ள அனுமதிப்பதாக இருந்தால், கலெக்டர் அனுமதியுடன், அரசிதழில் அதன் விவரத்தை வெளியிட வேண்டும்.அவ்வாறு அனுமதிக்கப்பட்ட நீர் நிலைகளில், ஐந்து லாரி கனிமம் மட்டும் எடுக்க வேண்டும். அதிக அளவில், கனிமம் எடுப்பதாக இருந்தால் கலெக்டருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை கலெக்டர் தலைமையிலான குழு பரிசீலனை செய்யும். இக்குழுவில், ஆர்.டி.ஓ., உள்ளிட்ட அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர். இக்குழு, விண்ணப்பங்களை பரிசீலனை செய்து, 30 நாட்களுக்குள் அனுமதி வழங்க வேண்டும்.அனுமதி வழங்கப்பட்ட நீர் நிலைகளில், ஒரு மீட்டர் ஆழத்திற்கு மேல், கனிமம் எடுக்கக் கூடாது; கரைகளை சேதப்படுத்தக் கூடாது; வாகனங்கள், நீர் நிலை உள்ளே செல்லக்கூடாது; விதிகளை மீறினால், அனுமதி உடனடியாக ரத்து செய்யப்படும் என அரசு அறிவித்துள்ளது.இவ்விவரம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**முருங்கை விவசாயத்தில் முத்தான வருமானம்: சாதிக்கிறார் சந்திரகுமார்**



திண்டுக்கல்: வெளிநாட்டு வேலை கனவில் மிதக்கும் இளைஞர்களிடையே, இயற்கை முறை முருங்கை விவசாயத்தில் சாதித்துள்ளார் திண்டுக்கல் பித்தளைப்பட்டி சந்திரகுமார். இவர் எம்.எஸ்சி., (பயோடெக்) முடித்ததும், சென்னை தனியார் நிறுவனத்தில் ரூ.10 ஆயிரம் சம்பளத்தில் பணி செய்தார். அன்றாட செலவுகளை சமாளிக்க இயலாமல் திணறினார். இதனால், சொந்த நிலத்தில் இயற்கை விவசாயத்தில் ஈடுபடும் எண்ணம் ஏற்பட்டது. ஓராண்டுக்கு முன் அதை செயல்படுத்தினார். இரண்டு ஏக்கரில் 20க்கு 20 என்ற அளவில் 200 முருங்கை கன்றுகளை நட்டார். அவை மரமாகி ஆறு மாதத்தில் காய்களை கொடுத்தன. ஒவ்வொரு மரத்திலும் 100 கிலோ காய்கள் கிடைத்தன. ஒரு கிலோ முருங்கைகாய் ரூ.35க்கு விற்பனையானது. இதனால் 6 மாதத்தில் ரூ.7 லட்சம் வருமானம் கிடைத்தது.

**சந்திரகுமார் கூறியதாவது:**தனியார் நிறுவனத்தில் குறைந்த சம்பளத்தில் சிரமப்பட்டேன். படிப்பை விவசாயத்திற்கு பயன்படுத்த முடிவு செய்தேன். களை எடுக்கும் டிராக்டர் மானியத்தில் பெற்றேன். இயற்கை உரங்களை பயன்படுத்தி முருங்கை சாகுபடி செய்தேன். தற்போது அதிக வருமானம் கிடைக்கிறது, என்றார்.இவரை 86953 86677ல் தொடர்பு கொள்ளலாம்.

## இன்றும் மழை தொடர வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில் வெப்பச்சலனம் காரணமாக இன்றும் (03-10-15)மழை தொடர வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

## முல்லை பெரியாறு அணையை 7ம் தேதி ஆய்வு செய்ய முடிவு

வட கிழக்கு பருவ மழை விரைவில் துவங்க உள்ள நிலையில், முல்லை பெரியாறு அணையை, மேற்பார்வை துணைக் குழு, வரும், 7ம் தேதி ஆய்வு செய்கிறது.

முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை, 142 அடியாக உயர்த்த உச்ச நீதிமன்றம், கடந்த ஆண்டு மே மாதம் உத்தரவிட்டது. அக்டோபர் மாதம், வட கிழக்கு பருவ மழையின் போது கிடைத்த நீர் மூலம், அணையின் நீர்மட்டம்,

142 அடியாக உயர்த்தப்பட்டது. இந்த ஆண்டுக்கான வட கிழக்கு பருவ மழை, துவங்க உள்ளது. இப்போது, அணையில், 142 அடிக்கு தண்ணீரை தேக்கி வைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி நியமிக்கப்பட்ட மேற்பார்வை குழுவுக்கு, உதவி புரியும் துணைக் குழுவினர், வரும், 7ம் தேதி, முல்லை பெரியாறு அணையில் ஆய்வு செய்கின்றனர்.

இக்குழுவில், மத்திய நீர்வளத்துறை, தமிழகம், கேரள மாநிலங்களின் பொதுப்பணித்துறை அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர். அணையில் நீர் இருப்பு, நீர் கசிவு உள்ளிட்ட விவரங்களை அவர்கள் ஆய்வு செய்து, மேற்பார்வை குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளனர். இதையடுத்து, இம்மாதம், 15ம் தேதிக்குள், மேற்பார்வை குழுவினர், அணையை ஆய்வு செய்ய திட்டமிட்டுள்ளனர்.

**திண்டுக்கல்லில் தொடர் மழை செடியில் கருகிய செண்டு மல்லி**



திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தில் தொடர் மழையால் செண்டு மல்லி பூக்கள் செடியிலேயே கருகி வருகின்றன. நஷ்டமடைந்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக மழை இல்லை. இதனால் கண்மாய், குளங்கள் வறண்டுள்ளன. கால்நடைகளுக்கு கூட தண்ணீர் கிடைக்காமல், அவதிப்பட்டு வந்தனர். பல விவசாயிகள் தங்கள் விளை நிலங்களை விலை நிலங்களாக்கி விட்டு, வெளி மாவட்டங் களுக்கு பிழைக்க சென்றனர். ஆனால் கிணற்று பாசனத்தில் பூ விவசாயம் செய்பவர்கள் கவலை இன்றி இருந்தனர்.ஆத்தூர் விவசாயி பால்பாண்டி: செண்டு மல்லிக்கு மழை ஆகாது. தற்போது பெய்து வரும் திடீர் மழையால் பூக்கள் கருகி வருகிறது. இதனால் மார்க்கெட்டில் கிலோ ரூ.5க்கு கேட்கிறார்கள். களை எடுப்பு, உரம் வைப்பு, பூச்சி மருந்து தெளிப்பு கூலி கூட கிடைக்காமல் அவதிப்படுகிறோம். வட்டிக்கு கடன் வாங்கி விவசாயம் செய்தவர்கள் சிரமத்தில் உள்ளனர். அதிகாரிகள் நெல், கரும்பு விவசாயிகளை மட்டும் தேடிச் சென்று பயிர்கள் இழப்பீடு கணக்கெடுத்து, நிவாரணம் வழங்குகின்றனர். பூ விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும், என்றார்.

**நிலத்தடி நீர் மட்டம் உயர்வால் விவசாயிகள் ஆறுதல்! தடுப்பணைகளால் கிடைத்தது விமோசனம்**




கடலூர்: கடலூர் மாவட்டத்தில் மழை பொழிவு குறைந்து வரும் நிலையில் தடுப்பணை, பண்ணைக்குட்டை அமைத்ததன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது.

விவசாயமே பிரதானமாகக் கொண்ட கடலூர் மாவட்டத்தில் வாய்க்கால் பாசனம் மற்றும் கிணற்று பாசன முறையில் நடைபெற்று வந்தது. காவிரியின் கடைமடை பகுதியான இப்பகுதியில் போதிய மழை இல்லாத காரணத்தினால், கிணற்று பாசனம் அதிகரித்துள்ளது. மேலும், மக்கள் தொகை பெருக்கம் காரணமாக நிலத்தடி நீரின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. மாவட்டத்தில் உள்ள பல தொழிற்சாலைகள் தங்கள் தேவைக்காக நிலத்தடி நீரை ராட்சத மோட்டர்களைக் கொண்டு உறிஞ்சி வருகிறது. அதே நேரத்தில் பருவமழை போதிய அளவு பெய்யாததன் காரணமாக மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் படிப்படியாக குறைந்து வருகிறது. இந்நிலையில், மாவட்டத்தில் கடந்த 2012ல் 54 சதவீதமும், 2013ல் 78 சதவீதமும், கடந்தாண்டு 50 சதவீத அளவே மழை பெய்தது.

மூன்று ஆண்டுகளாக போதிய மழை இல்லாத காரணத்தினால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்த வந்ததால், கடல் நீர் உட்புகும் ஆபத்து நிலவியது கடல் நீர் உட்புகுவதைத் தடுத்திடவும், நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்கிட ஆறுகளில் தடுப்பணைகள் கட்டப்பட்டது. அதேபோன்று கிராமங்களில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்கவும், மீன் குட்டைகள் அமைக்க நிதியுதவி வழங்கியது.

இதன் காரணமாக கிராமங்களில் ஏராளமான பண்ணை குட்டைகள் மற்றும் மீன் வளர்ப்பு குளங்கள் ஏற்படுத்தப் பட்டன. இந்நிலையில், இந்தாண்டு கடந்த 9 மாதங்களில் (செப்டம்பர் 30 வரை) 535.8 மி.மீ., மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் கடும் வெயிலுக்கு மத்தியிலும் 487.83 மி.மீ., மழை பெய்துள்ளது.

சராசரி அளவில் 91 சதவீதம் பெய்த மழையினால், பண்ணைக் குட்டைகள் மற்றும் தடுப்பணைகளால் நிலத்தடி நீர் மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. கடந்தாண்டு செப்டம்பர் மாதம் 8.16 மீட்டர் ஆழமாக இருந்த நிலத்தடி நீர் மட்டம் இந்தாண்டு 6.88 மீட்டராக உயர்ந்துள்ளது. போதிய மழையின்மை, மின்தடை போன்ற காரணங்களால் பயிரை காப்பாற்ற முடியாமல் தவித்து வரும் மாவட்ட விவசாயிகளுக்கு சற்று ஆறுதலைத் தந்துள்ளது.

இதேபோன்று, தமிழக அரசு கொண்டு வந்த மழை நீர் சேகரிப்பு திட்டத்திற்கு மாவட்ட நிர்வாகம் புத்துயிர் அளித்து செயல்படுத்தினால், எதிர்வரும் வடகிழக்கு பருவமழையில் கிடைக்கும் நீரைக் கொண்டு நிலத்தடிநீர் மட்டத்தை கணிசமாக உயர்த்த வாய்ப்பு உள்ளது.

## நுண்ணீர் பாசன விவசாயிகள் மானியத்துக்கு காத்திருப்பு! விரைவில் கிடைத்தால் பலன்

பொள்ளாச்சி: பொள்ளாச்சி தெற்கு தோட்டக்கலைத் துறையில், நுண்ணீர் பாசனம் அமைக்க மானியம் கேட்டு, 100 விவசாயிகள் பதிவு செய்து காத்திருக்கின்றனர். பொள்ளாச்சி பகுதியில் தென்னை விவசாயம் பெரும்பான்மையாக நடந்தாலும், காய்கறி, கீரை, பழவகை சாகுபடியும் அதிகரித்து வருகிறது.

இவ்வகை பயிர்களுக்கு, தோட்டக்கலைத் துறை மூலம் அரசு தொழில்நுட்ப ஆலோசனைகள், மானியத்திட்டங்களை அளித்து வருகிறது. பாசன நீரை சேமிக்கும் முக்கிய திட்டமாக நுண்ணீர் பாசன திட்டம் உள்ளது. பருவத்தில், பயிர்களின் வேர் பகுதிக்கு, நீர் மற்றும் உரங்களை சொட்டு நீர் மற்றும் நீர் வழி உரமிடும் முறை மூலம் அளிப்பதே, நுண்ணீர் பாசன முறை. நீர் பற்றாக்குறை நிலவி வரும் காலத்தில், சொட்டு நீர் பாசன முறையை கையாள்வதால் மட்டுமே, பயிர்களை சாகுபடி செய்ய இயலும். தேவையான அளவு நீரை, நேரடியாக வேர் பகுதிக்கு செலுத்துவதன் மூலம், பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன.

தண்ணீர் தேவையும், 50 சதவீதம் குறைகிறது. சேமிக்கப்பட்ட நீரை கொண்டு, கூடுதல் பரப்பு சாகுபடி கொண்டு வரப்படுகிறது. களைகள் குறைவாக காணப்படுவதால், களை கட்டுப்பாட்டுக்கான செலவும் குறைகிறது.

பொள்ளாச்சியின் பல பகுதிகளில், நுண்ணீர் பாசன முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.தோட்டக்கலைத் துறை மூலம், கடந்த இரு ஆண்டுகளாக நுண்ணீர் பாசனத்துக்கு மானியம் எதுவும் அளிக்கப்படவில்லை. சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் அளிப்பதாக, தமிழக அரசு அறிவித்தது.

மானிய அறிவிப்பு வெளியிட்டவுடன், பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தை சேர்ந்த 100 விவசாயிகள், 92.2 ஏக்கர் பரப்புள்ள விளைநிலத்துக்கு, நுண்ணீர் பாசனத்துக்கு மானியம் கேட்டு, தோட்டக்கலைத் துறையில் முன்பதிவு செய்துள்ளனர்; இதுவரை மானியம் வழங்கப்படவில்லை. தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறுகையில், 'நுண்ணீர் பாசனத்துக்கு மானியம் வழங்கப்படும் என அரசு அறிவித்ததை தொடர்ந்து, விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

மானியம் வழங்குவது குறித்து, இதுவரை அரசாணை வெளியிடப்படவில்லை. வெளியிட்டவுடன், பதிவு செய்துள்ள விவசாயிகளிடம், சிட்டா, அடங்கல், நில உரிமை சான்று பெற்று, மானியம் வழங்கப்படும்' என்றனர்.

**சிறுவாணி அணை நிரம்பும் வடகிழக்கு பருவமழையால்..., வருணன் கருணை!**




கோவை: கோவைக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி அணை, தென்மேற்கு பருவமழைக்கு நிரம்பவில்லை. தற்போது துவங்கியுள்ள வடகிழக்கு பருவமழைக்கு, அணை நிரம்பும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது.

கோவை மாநகராட்சி, வழியோர கிராமங்களில் வசிக்கும், மூன்று லட்சம் மக்களின் குடிநீர் தேவைக்காக, மேற்குத் தொடர்ச்சி மலையில், கேரள வனப்பகுதியில் சிறுவாணி அணை கட்டப்பட்டுள்ளது. அணையில், அதிகபட்சமாக, 650 மில்லியன் கனஅடி தண்ணீர் தேக்க முடியும். தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைக் காலங்களில், அணை நிரம்புவது வழங்கம். 2009க்கு பிறகு, தென்மேற்கு பருவமழை சீசனில் மட்டுமே சிறுவாணி அணை நிரம்புகிறது; 2011ல் இருந்து, இரண்டு ஆண்டுகள் அணை நிரம்பவே இல்லை.

கடந்த, 2013ல், தென்மேற்கு பருவமழை சீசனுக்கு அணை நிரம்பியது. கடந்தாண்டு, தென்மேற்கு பருவமழை தீவிரத்தின் காரணமாக, ஆக., முதல் தேதியில் நிரம்பிய அணை, நான்கு மாதங்களுக்கு நீர்மட்டம்

குறையாமல் இருந்தது. ஆனால், இந்தாண்டு தென்மேற்கு பருவமழை சீசன்
கைகொடுக்கவில்லை. ஏப்., மாதமே மழை சீசன் துவங்கி, அக்னி வெயிலை கூட உணர முடியாத அளவுக்கு மழை பெய்தது. இதனால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது.

அதன்பின், ஜூனில் மழை பெய்யவில்லை. ஜூலையில் மறுபடியும் மழை தீவிரமடைந்ததால், 15.1 மீ., உயர சிறுவாணி அணையில், 11.54 மீ., நீர்மட்டமாக உயர்ந்தது. ஆக., மாதம் தென்மேற்கு பருவமழை பொய்த்து போனது. இதனால், சிறுவாணி அணை நிரம்பவில்லை. அதன்பின், அணையின் நீர்மட்டம் இறங்குமுகமாக இருந்தது. குடிநீர் தேவைக்காக, 10.14 கோடி லிட்டர் தண்ணீர் வழங்குவது, படிப்படியாக குறைக்கப்பட்டு, நேற்றைய நிலவரப்படி, 7.45 கோடி லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது.

மாநகரம் மற்றும் வழியோர கிராமங்களில், சிறுவாணி குடிநீர் வினியோக அளவு குறைக்கப்பட்டு, வார்டுகளில் வாரம் இருமுறை குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. இதனால், சிறுவாணியில் நேற்றைய நிலவரப்படி, 9.48 மீ., நீர்மட்டம் இருந்தது. அணையினுள் உள்ள நீர்புகு கிணற்றின், நான்கு வால்வுகளில், முதல் வால்வு வெளியே தெரிகிறது; இரண்டாவது வால்வில் பாதியளவு நீர்மட்டம் உள்ளது.

தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே துவங்கி, நம்பிக்கை ஏற்படுத்தி ஏமாற்றியது. தற்போது, வடகிழக்கு பருவமழை சரியான சீசனில் துவங்கி யுள்ளது. வழக்கமாக, சமவெளிப்பகுதியில் தீவிரம் காட்டும் வடகிழக்கு பருவமழை, சிறுவாணி வனத்தில் தீவிரமடைந்துள்ளதால், இந்த சீசனில்

அணை நிரம்பலாம் என்ற நம்பிக்கை துளிர் விட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறியதாவது: சிறுவாணி அணை, கடந்தாண்டு நிரம்பினாலும், நான்கு மாதத்திற்கு நீர்மட்டம் குறையாமல் இருந்தது. இந்தாண்டு, மழை பரவலாக பெய்து, நொய்யலில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும், சிறுவாணி அணை நிரம்பவில்லை. இதனால், குடிநீர் அளவு குறைக்கப்பட்டுள்ளது. செப்., இறுதியில் துவங்கியுள்ள வடகிழக்கு பருவமழை, மலைத்தொடர் மற்றும் சமவெளியில் பரவலாக பெய்கிறது.

கடந்த ஒரு வாரத்தில், சிறுவாணி அணையில், 90 மி.மீ., மழை பெய்துள்ளது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், குடிநீர் தேவைக்கு தண்ணீர் வெளியேறினாலும், நீர்மட்டம் குறையாமல் உள்ளது. அக்., - டிச., வரையான மூன்று மாதத்தில், தொடர்ந்து, 10 நாட்கள் கனமழை பெய்தால், அணை நிரம்பி விடும்.

இந்தாண்டு வடகிழக்கு பருவமழை சீசனில், சிறுவாணி அணை நிரம்பும் என, எதிர்பார்க்கிறோம். அணை நிரம்பாவிட்டாலும், அவ்வப்போது கனமழை பெய்தால், நீர்மட்டம் சரியாமல் இருக்கும். குடிநீர் வினியோகத்திலும் பிரச்னை ஏற்படாமல் இருக்கும். இயற்கையை நம்பி காத்திருக்கிறோம் இவ்வாறு, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

### 36 நாட்களில் நடப்பட்ட மரக்கன்றுகள், 37,000

திருப்பூர்: ""வனத்துக்குள் திருப்பூர் திட்டத்தில், 36 நாட்களில், 37 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன; விரைவில், இலக்கு எட்டப்படும்," என,

வெற்றி அமைப்பு தலைவர் சிவராம் கூறினார்.

"ஈரோடு ஸ்டீல்ஸ்' நிறுவன வெள்ளி விழா ஆண்டை கொண்டாடும் வகையில், "வனத்துக்குள் திருப்பூர்' திட்டத்தில், மரக்கன்றுகள் நடும் விழா, வஞ்சிபாளையத்தில் நேற்று நடைபெற்றது. திருப்பூர் - வஞ்சிபாளையம் ரோட்டில், 4.5 கி.மீ., தூரத்துக்கு, ரோட்டோரங்களில், ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டு, பாதுகாப்பு கூண்டுகள் வைக்கப்படுகின்றன. சிவராம் பேசியதாவது: மாமனிதர் அப்துல் கலாம், ஒவ்வொருவரும், தனது வாழ்நாளில், ஐந்து மரக்கன்றுகளையாவது நட வேண்டும் என்று மட்டும் சொல்லவில்லை; நட்டு பராமரிக்க வேண்டும் என்றார்.

அவரது கனவை நனவாக்கும் வகையில், ஒரு லட்சம் மரக்கன்று நட்டு, பராமரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கடந்த, 36 நாட்களில், 37 ஆயிரம் மரக்கன்றுகளை நட்டுள்ளோம். "தினமலர்' நாளிதழ், தமிழக வனத்துறை, மாவட்ட நிர்வாகம், நன்கொடையாளர்கள், சேவை அமைப்புகள், இதற்கு உறுதுணையாக உள்ளனர். ஒரு லட்சம் மரக்கன்றுகளை, நவ., 15க்குள் நட திட்டமிட்டிருந்தோம். இலக்கை தாண்டி அதிகமாக நடுவதற்கான வாய்ப்புகள், பிரகாசமாக உள்ளன. நன்கொடையாளர்களும், பொது மக்களும் ஊக்கமளித்து வருகின்றனர். யாரும் விளம்பரத்துக்காக மரக்கன்றுகள் நடவில்லை; அவற்றை பராமரிக்க,
10 டிராக்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், 30 பேர் வழங்கிய டிராக்டர்கள் புதுப்பிக்கும் பணி நடந்து வருகிறது. வேளாண் துறை அதிகாரிகள் கொண்ட குழு, மரக்கன்றுகளின் வளர்ச்சியை தொடர்ந்து கண்காணிக்கின்றனர்.

இவ்வாறு, சிவராம் பேசினார். "மெஜஸ்டிக் எக்ஸ்போர்ட்ஸ்' கந்தசாமி பேசுகையில், ""வருங்கால தலைமுறைக்கு காசு, பணத்தை சம்பாதித்து வைக்கிறோம். அவர்கள் சுவாசிக்க, நல்ல காற்றும், மாசற்ற சுற்றுச்சூழலையும் உருவாக்க வேண்டும். உன்னதமான இத்திட்டத்தில், ஒவ்வொருவரும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்," என்றார். சிக்கண்ணா கல்லூரி முதல்வர் சண்முகசுந்தரம் பேசுகையில், ""திருப்பூருக்கு, நான் புதியவன்; இங்கு, "வனத்துக்குள்

திருப்பூர்' திட்டத்தில், மரக்கன்று நட்டு பராமரிக்க, பலரும் ஆர்வம் காட்டுவதும், நன்கொடை வழங்குவதும், மிக பிரமிப்பாக உள்ளது. இக்கலாசாரம், நாடு முழுவதும் பரவினால், பசுஞ்சோலை வனமாகும்," என்றார். நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் பழனியப்பன், "ரமேஷ் கார்மென்ட்ஸ்' ராமசாமி, எஸ்.பி.ஐ., துணை பொது மேலாளர் விஜயகுமார், "ஈரோடு ஸ்டீல்ஸ்' உரிமையாளர் கணேஷ் குடும்பத்தினர், சிக்கண்ணா கல்லூரி பசுமை சுற்றுச்சூழல் சங்க ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பங்கேற்று, மரக்கன்று நட்டனர்.

தன்னார்வலர்கள் ஆர்வம் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பராமரிக்கும் வகையில், டிராக்டர் மற்றும் அதற்கான இரண்டு ஆண்டு செலவை ஏற்கனவே, 40 நிறுவனங்கள் ஏற்றுள்ளன. நேற்றைய விழாவில், "டோடி' நிறுவன உரிமையாளர் ராகுல், விகாஸ் வித்யாலயா கல்வி குழுமங்களின் தலைவர் ஆண்டவர் ராமசாமி, "கைட்டி' நிறுவன உரிமையாளர்கள் மணி, பூபதி, "சென்னியப்பா ஸ்பின்னிங்ஸ்' உரிமையாளர் மணி, சீனிவாசா மகால் "ரோலக்ஸ்' மனோகர் ஆகியோர், தாமாக முன்வந்து, டிராக்டர்

வழங்குவதாக அறிவித்தனர். தன்னார்வலர்களின் இச்செயல், "வனத்துக்குள் திருப்பூர்' திட்டத்தை, மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

### கரும்பு விவசாயிகளிடம் 14ம் தேதி கருத்து கேட்பு

காஞ்சிபுரம்: மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையுடன், உத்திரமேரூர் கரும்பு விவசாயிகள் இணைவது குறித்து, வரும் 14ம் தேதி, கருத்து கேட்பு கூட்டம் நடைபெற உள்ளது. இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) சவுரிராஜன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையுடன் உத்திரமேரூர் பகுதி கரும்பு விவசாயிகள் இணைவது குறித்து, கருத்து கேட்பு கூட்டம், வரும் 14ம் தேதி காலை 9:30 மணிக்கு, காஞ்சிபுரம் அன்னை அஞ்சுகம் கூட்டரங்கில் நடைபெற உள்ளது.

சர்க்கரை துறை இயக்குனர் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்திற்கு, களியாம்பூண்டி, குண்ணவாக்கம், திருப்புலிவனம், உத்திரமேரூர் மற்றும் அரும்புலியூர் ஆகிய ஐந்து குறுவட்டத்தைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டு, தங்களது கருத்துகளை பதிவு செய்யலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

### மானாவாரி நெற்பயிர் தண்ணீரின்றி கருகல்

வாலாஜாபாத்: போதிய பருவமழை இல்லாத தால், மானாவாரி பயிராக விதைக்கப்பட்ட நெற்பயிர்கள், தண்ணீரின்றி கருகி வருகின்றன.காஞ்சிபுரம் மாவட்டத்தில், பருவமழையை நம்பி, 4,000 ஏக்கர் நிலத்தில், மானாவாரி பயிராக

விவசாயிகள் நெல்லை விதைத்து உள்ளனர். வடகிழக்கு பருவமழை போதிய அளவில் பெய்யாததால், பரந்துார், காரை, கோவிந்தவாடி அகரம், மூலப்பட்டு, சாமந்திபுரம், வளத்துார் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில், விதைக்கப்பட்டுள்ள, 75 ஏக்கர் நெற்பயிர்கள் கருகி உள்ளன. இதுகுறித்து பரந்துார் குறு வட்ட விவசாயிகள் கூறுகையில், 'பருவமழையை நம்பி, விதைத்தோம். மழை இன்றி பயிர்கள் வாடி வதங்கி இருப்பது நஷ்டத்தை விட வேதனையை அதிகமாக்கி உள்ளது' என்றனர். வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'பருவமழை பொய்த்ததற்கு, நாங்கள் பெறுப்பு ஏற்க முடியாது. இருப்பினும், விவசாயிகளின் நலனுக்காக, மழை வேண்டும் என, பிரார்த்தனை செய்து வருகிறோம்' என்றார்.

**கே.ஆர்.பி., அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேற்று முன்தினம் நள்ளிரவு முதல், கன மழை பெய்ததால், கே.ஆர்.பி.,அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளதால், ஐந்து மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த, ஒரு வாரமாக, பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் நள்ளிரவு, 1 மணி முதல், நேற்று காலை, 7 மணி வரை, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக கனமழை பெய்தது. இடி, மின்னல், காற்று இல்லாமல் பெய்த மழையால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அத்துடன் நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கி நின்றது. கிருஷ்ணகிரி நகரில் பழையபேட்டை மற்றும் புதுப்பேட்டையில் உள்ள திருவள்ளுவர் தெருவில், வீடுகளில் மழை நீருடன் சேர்ந்து கழிவுநீரும் புகுந்தது. காந்தி

சாலையில் உள்ள விநாயகர் கோவிலில், மழைநீர் புகுந்து தேங்கி நின்றது. மார்க்கெட் சாலை, பழைய சப்-ஜெயில் சாலை உள்ளிட்ட பகுதியில், சாலையில் சாக்கடை நீருடன் கழிவுநீரும் தேங்கி நின்றது. ஒரு சில இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தது.

நேற்று காலை நிலவரப்படி, கிருஷ்ணகிரியில் அதிகபட்சமாக, 70.40 மி.மீ., மழை பெய்துள்ளது. போச்சம்பள்ளி, 66.60, நெடுங்கல், 53.40, பாரூர், 46.80, சூளகிரி, 42, அஞ்செட்டி, 27, ராயக்கோட்டை,17, ஓசூர், 13, தேன்கனிக்கோட்டை, 4 மி.மீ., மழை பதிவானது. கடந்த, ஒரு வாரமாக கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணையின் நீர்மட்டம், 50.30 அடியாக இருந்தது. அணையில் இருந்து, 449 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. தற்போது பெய்த கன மழையால், அணைக்கு வரும் நீரின் அளவு ஏற்கனவே இருந்ததை விட தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால், அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. நேற்று மதியம், 2 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு, 1,237 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து, 945 கன அடி தண்ணீர் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. அணையின் மொத்த உயரமான, 52 அடியில் தற்போது, 51.05 அடி தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால், அணை கடல் போல் காட்சியளிக்கிறது. தென்பெண்ணை ஆற்றில் வினாடிக்கு, 900 கன அடிக்கு மேல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய, ஐந்து மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

### தொடர் மழையால் பசுமையான ஆசனூர் பகுதி

சத்தியமங்கலம்: தொடர் மழையால், சத்தியமங்கலம் அடுத்துள்ள ஆசனூர் மலைப்பகுதி பசுமையாக காட்சியளிக்கிறது. சத்தியமங்கலம் அடுத்துள்ள ஆசனூர் மலைப்பகுதி, கடல் மட்டத்தில் இருந்து, 1,105 மீட்டர் உயரம்

கொண்டதாகும். இப்பகுதி முழுவதும் வனத்தால் சூழப்பட்டுள்ளது. அடர்ந்த வனமாக உள்ளதால், ஊட்டியை போல் காட்சியளிக்கும். இதனால் இப்பகுதியில் வசிக்கும் விவசாயிகள், தங்கள் விளை நிலங்களில் உருளை கிழங்கு, பீட் ரூட், முட்டைகோஸ், கேரட் போன்ற கிழங்கு பயிர்களை நடவு செய்துள்ளனர். இங்குள்ள தட்பவெப்பம் ஊட்டிக்கு நிகராக இருப்பதால், இந்த கிழங்கு பயிர்கள் நன்கு வளர்கிறது. கடந்த இரண்டு மாதங்களில் தொடர்ந்து ஆசனூர் மலைப்பகுதியில், பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் நடவு செய்துள்ள பயிர்கள், எவ்வித நோய் தாக்குதலும் இல்லாமல், பசுமையாக காட்சியளிக்கிறது. குறிப்பாக பழைய ஆசனூர், கோட்டாடை, குழியாடை, மாவநத்தம், தேவர்நத்தம், மாவள்ளம், காளிதிம்பம், கெத்தேசால், கேர்மாளம் ஆகிய பகுதிகளில் கண்ணுக்கு தெரியும் தூரம் வரை பசுமையாக காட்சியளிக்கிறது. மழை நீர் தேங்கியதாலும், மேகமூட்டமாக உள்ளதாலும், இந்த அழகிய காட்சி, இந்த வழியாக செல்லும் சுற்றுலா பயணிகளை ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**விதை பரிசோதனை அவசியம்**

ஊட்டி : 'நீலகிரி விவசாயிகள், சாகுபடிக்கு முன், விதைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊட்டி விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் லாவண்யாஜெயசுதா அறிக்கை;

நீலகிரி விவசாயிகள், விதையின் முளைப்புத் திறன் அறிந்து பயிர் சாகுபடி மேற்கொள்ள வேண்டும். அதிக முளைப்புத் திறன், அளவான ஈரப்பதம், இன, புறத் துாய்மை, பூச்சி, நோய் தாக்குதல் இல்லாமை போன்றவை தான் நல்ல விதைகள் என, சான்றளிக்கப்படுகிறது. விதைப் பரிசோதனை நிலையத்தில் விதைகளின் புறத்துாய்மை, முளைப்புத்

திறன், பிற ரக கலப்பு மற்றும் விதை நலம் உட்பட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விவசாயிகளால் நேரடியாக வழங்கப்படும், விதை மாதிரிகளும் பரிசோதனை செய்யப்படுகின்றன; கட்டணம், 30 ரூபாய் மட்டுமே. மலைக் காய்கறிகளின் முளைப்புத் திறன் குறித்த சோதனை முடிவுகள் ஏழு நாட்கள், அதிகபட்சம், 14 நாட்களுக்குள் வீட்டு முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும். விவசாயிகள், விதை முளைப்புத் திறனை அறிந்து பயிர் சாகுபடியில் ஈடுபட வேண்டும். இவ்வாறு, லாவண்யாஜெயசுதா கூறியுள்ளார்.

## மழையில் பாதிக்கப்பட்ட காய்கறி இழப்பீடு வழங்கினால் நிம்மதி

ஊட்டி: 'மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட காய்கறிகளுக்கு, இழப்பீடு வழங்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது. நீலகிரி கிழங்கு, காய்கறி உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட கலெக்டருக்கு வழங்கிய மனு: ஊட்டி சுற்றுப்புற பகுதிகளில், கடந்த, 26,27 தேதிகளில், தலைக்குந்தா, கன்னேரிமுக்கு, கோக்கால், சேலைக்கல், துாபக்கண்டி, சோலுார் உட்பட பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதில், 60 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாய நிலத்தில், பயிரிடப்பட்டிருந்த கேரட், உருளைக் கிழங்கு, பீட்ரூட், பீன்ஸ், பூண்டு உட்பட பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி சேதமடைந்தன. நீர் பாய்ச்ச வைக்கப்பட்டிருந்த, 15 மோட்டார், குழாய்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. அந்த விவசாய நிலங்களை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர சில மாதங்கள் பிடிக்கும். எனவே, தகுதியுள்ள விவசாயிகளுக்கு விரைவில் இழப்பீடு வழங்க வேண்டும். இவ்வாறு, கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

## விவசாயிகளுக்கான கருத்தரங்கு

சாணார்பட்டி:சாணார்பட்டி அருகே நொச்சியோடைபட்டியில் பெரம்பலூர் ரோவர் வேளாண்மை கல்லூரி சார்பில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு நடந்தது.

முதல்வர் செல்வராஜன் தலைமை வகித்தார். மா.சா., சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானி ஆனந்த் வரவேற்றார். தோட்டக்கலை பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகளின்சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.கூவனூர்த்து ஊராட்சி தலைவர் கிருஷ்ணமூர்த்தி, சாணார்பட்டி உதவி வேளாண்மை இயக்குனர் இளங்கோவன், பேராசிரியர்கள் ஜெபராஜ், பொன்விழி ரம்யா மற்றும் இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். கிராம தங்கல் திட்ட மாணவர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**விதை நேர்த்தி செய்தால் வறட்சியை தாங்கி வளரும்**

சின்னமனூர்:"மானாவாரி விவசாயிகள் விதை நேர்த்தி செய்து விதைப்பதால் வறட்சியை தாங்கி வளரும் தன்மை கிடைக்கும்', என்று சென்டெக்ட் திட்ட இயக்குநர் மாரிமுத்து அறிவுறுத்தி உள்ளார்.

கடந்த சில நாட்களாக மாவட்டத்தில் பரவலாக கன மழை பெய்கிறது. தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால் விரக்தியிலிருந்த மானாவாரி விவசாயிகள் தற்போதைய மழையை பயன்படுத்தி தானியங்கள், எண்ணெ# வித்துகள், பயறு வகைகளை பயிரிடுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தரிசு நிலங்களில் மானாவாரி பயிரிடுவதால் வெப்பத்தின் தாக்கம் குறையும். கூடலூர், தேவாரம், ஆண்டிபட்டி பகுதியில் காய்கறி செடிகள் பாதிப்படைந்துள்ளன. வாழை, தென்னை விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக இந்த மழை அமைந்துள்ளது.

மழையால் வேர் நன்கு வளர்ச்சி பெற்று, நுண்ணுயிர்கள் பெருகும். நுண்ணூட்ட சத்துகள் இயற்கையாக கிடைப்பதால், கெமிக்கல் உரங்களின் பயன்பாடு குறையும் வாய்ப்புள்ளது.

காமாட்சிபுரம் சென்டெக்ட் கே.வி.கே., திட்ட இயக்குநர் மாரிமுத்து கூறுகையில், "மாவட்டத்தில் பரவலாக பெய்த மழை வாழை விவசாயத்திற்கு நல்ல பலனளிக்கும். நடவு செய்து 3 மாத பயிராக உள்ள வாழையில் அகத்தி உள்ளிட்டவற்றை ஊடுபயிராக பயிரிடலாம்.

தற்போதுள்ள ஈரப்பதத்தில் வளர்ந்த பின் அவற்றை வெட்டி மடித்து உரமாக்கலாம். இதனால் நிலத்தில் உள்ள காரத்தன்மை குறையும். மானாவாரி விதைப்பவர்கள் விதை நேர்த்தி செய்து பயிரிட்டால், நுண்ணுயிர் சத்து கிடைத்து வறட்சியை தாங்கும் தன்மையை பெறும்,' என்றார்.

**பருவமழை துவங்கியதால் மிளகாய் சாகுபடி பணிகள் தீவிரம்**

முதுகுளத்தூர்: ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் செப்.,ல் பருவமழை துவங்குவது வழக்கம். இந்தாண்டு தாமதமாக மழை பெய்ய துவங்கியுள்ளது. பருவமழையை நம்பி அக்., கடைசியில் சாகுபடி செய்யவுள்ள மிளகாய் செடிகளுக்கு, விதை விதைத்து நாற்றுகள் தயார்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கீழக்கன்னிசேரி, விளங்குளத்தூர், கீழத்தூவல், மகிண்டி, சாம்பக்குளம், காக்கூர், புளியங்குடி, பொன்னக்கனேரி, ஆதனக்குறிச்சி, பொசுக்குடி உ<ள்பட 50 க்கும் மேற்பட்ட கிராமங்களில் பாத்திகள் அமைத்து மிளகாய் நாற்றுகள் வளர்க்கபடுகிறது. மழை, வெயிலில் இருந்து நாற்றுகளை பாதுகாக்க அதன்மேல் பனை ஓலைகளை வைத்து மூடியுள்ளனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகத்தில் சில இடங்களில் மழை வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் சில இடங்களில் சனிக்கிழமை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வெப்பசலனம் காரணமாக கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் தமிழகம், புதுவையில் சனிக்கிழமையும் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளியில் 70 மி.மீ. மழையும் கடலாடியில் 60 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

பாரூர், பென்னாகரம் (50 மி.மீ.), மாரண்டஹள்ளி, முத்துப்பேட்டை, பொள்ளாச்சி, சூளகிரி (40 மி.மீ.), வேதாரண்யம், ஸ்ரீவில்லிபுத்தூர் (30 மி.மீ.), தாமரைபாக்கம், பாலக்கோடு, போடி, கடலூர், ராதாபுரம், திருவாரூர் (20 மி.மீ.), திருப்பூர், பவானிசாகர், கழுகுமலை, ஓசூர், அவிநாசி, தொண்டி, சங்கரன்கோயில், இரணியல், குழித்துறை, பாம்பன், திருச்செந்தூர், நாகர்கோயில், உடுமலைபேட்டை, பூதபாண்டி (10 மி.மீ.) உள்ளிட்ட இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**12.5% உணவுப் பொருள்களில் பூச்சிக் கொல்லி மருந்துகள் கலப்பு: மத்திய அரசின் பரிசோதனையில் கண்டுபிடிப்பு**



நாடு முழுவதும் இருந்து சேகரிக்கப்பட்ட உணவுப் பொருள்களின் மாதிரிகளில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில், 12.5 சதவீத உணவுப் பொருள்களில் அனுமதிக்கப்படாத பூச்சிக் கொல்லி மருந்துகள் கலந்திருப்பது மத்திய அரசால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: உணவுப் பொருள்களில் பூச்சிக் கொல்லி மருந்துகள் கலந்துள்ளனவா என்பதை கண்டறியும் வகையில், மத்திய அரசால் "மானிடரிங் ஆஃப் பெஸ்டிசைட் ரிசிடியூஸ்' என்ற திட்டம் கடந்த 2005ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், கடந்த 2014-15ஆம் ஆண்டு காலத்தில் நாடு முழுவதும் உள்ள சில்லறை விற்பனை நிலையங்கள், இயற்கை அங்காடிகள், விவசாய உற்பத்தி சந்தைக் குழுவின் சந்தைகளில் இருந்து உணவுப் பொருள்களின் 20,618 மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. அதில், காய்கறிகள், பழங்கள், நறுமணப் பொருள்கள், மிளகாய்ப் பொடி, கறிவேப்பிலை, அரிசி, கோதுமை, பருப்புகள், மீன், இறைச்சி, முட்டை, தேயிலை, பால், தண்ணீர் ஆகியவை அடங்கும். அவை அனைத்தும், ஆராய்ச்சிக் கூடங்களில் தீவிர பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அதில், 12.5 சதவீத உணவுப் பொருள்களில், அனுமதிக்கப்படாத பூச்சிக் கொல்லி மருந்துகளான கார்போசல்பான், ஆசிபேட், பிஃபென்திரின், ஆசிடமிபிரிட், டிரியாஜோபோஸ்,

மெடாலாசைல், மலாதியன், புரோபினோபோஸ், ஹெக்சாகோனாஜோல் உள்ளிட்டவை கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. வேளாண் அங்காடி, சில்லறை விற்பனை நிலையங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட 1,180 காய்கறி மாதிரிகள், 225 பழ மாதிரிகள், 732 நறுமணப் பொருள்களின் மாதிரிகள், 30 அரிசி மாதிரிகள், 43 பருப்பு மாதிரிகளில் அவை கலந்திருப்பது தெரிய வந்துள்ளது.

காய்கறி மாதிரிகளில் ஆசிபேட், பிஃபென்திரின், டிரியாஜோபோஸ், ஆசிடமிபிரிட், மெடாலக்சைல், மலாதியான் ஆகிய அனுமதிக்கப்படாத பூச்சிக் கொல்லி மருந்துகளும், பழங்களின் மாதிரிகளில் ஆசிபேட், ஆசிடமிபிரிட், கார்போ சல்பான், சைபர்மிதிரின், புரோபினோபோஸ், குயினால்போஸ், மெடாலாசைல் ஆகியவையும் கலந்துள்ளன.

அரிசி மாதிரிகளில், புரோபினோபோஸ், மெடாலாசைல், ஹெக்சாகோனாஜோலும், பருப்பு மாதிரிகளில் டிரியாஜோபோஸ், மெடாலாசைல், கார்பரைல், ஆசிபேட் ஆகியவை கலந்துள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பூமியை வாழ விடுங்கள்!

புவி வெப்பம் உயர்வதற்கு அடிப்படைக் காரணிகளில் ஒன்றான கரியமில வாயுவை காற்றுமண்டலத்தில் எல்லா நாடுகளும் கலக்கவிடுகின்றன. இதில் இந்தியாவின் பங்கு மிகக் குறைவு. ஆனாலும்கூட, இந்தியா தனது கரியமில வாயுவை 2030-ஆம் ஆண்டின்போது, 2005-ஆம் ஆண்டில் இருந்த அளவில் 35% குறைக்க இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதுமட்டுமல்ல. அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த மின் உற்பத்தியில் நிலக்கரி சாரா மின்உற்பத்தியை 40% உயர்த்துதல், பசுமைப் பரப்பை அதிகரிப்பதன் மூலம் மூன்று மில்லியன் டன் கரியமில வாயுவை காடுகளால் உறிஞ்சச் செய்தல் ஆகியனவும் இந்த இலக்குகளில்

இன்றியமையாதவை.

உலகம் முழுவதும் வெளியிடும் கரியமில வாயுவின் அளவு 34.5 பில்லியன் டன். இதில் சீனா 9.86 பில்லியன் டன் (28.6%), அமெரிக்கா 5.19 பில்லியன் டன் (15%), ஐரோப்பிய ஒன்றியம் 3.74 பில்லியன் டன் (10.9%), இந்தியா 1.97 பில்லியன் டன் (5.7%) கரியமில வாயுவை வெளிப்படுத்துகின்றன. புவிவெப்பம் அதிகரிக்க இந்தியாவின் பங்கு மிகமிகக் குறைவு.

ஐ.நா. சபையில், புவிவெப்ப மாறுதலுக்கான இந்தியாவின் பங்களிப்பு இலக்கு குறித்த உரையில், இந்தியாவின் விழைவுகள் குறித்து இந்திய அரசு விளக்கும்போதே, "புவிவெப்பம் அதிகமானதற்கு இந்தியாவின் பங்கு ஏதுமில்லை என்றாலும், இப்பிரச்னையில் தீர்வு காண்பதில் பங்கு கொள்ள விரும்புகிறது' என்றே குறிப்பிட்டுள்ளது. ஆனாலும், இந்தியா மிக உயரிய, சொல்லப்போனால் சக்திக்கு மீறிய இலக்கை நிர்ணயித்துள்ளது எனலாம்.

அடுத்த பதினைந்து ஆண்டுகளில் இந்தியாவில் நிகழப்போகும் மாற்றங்கள் கற்பனைக்கு எட்டாதவை. இந்தியாவை வல்லரசாக்கும் முனைப்புடன் உலக நாடுகள் அனைத்தையும் இந்தியாவில் முதலீடு செய்ய அழைக்கின்றோம். மக்கள்தொகை மிக அதிகமாகும். மின்தேவை அதிகமாகும். ஒரு செல்லிடப்பேசி மின்னூட்டம் (சார்ஜர்) மிகக் குறைவான மின்சாரம் என்றாலும் ஓர் ஆண்டு முழுவதும் ஆகும் அளவு சுமார் ஐந்து யூனிட். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு நபரும் செல்லிடப்பேசி வைத்துள்ளனர். இதுதவிர, மடிக்கணினியும் சேர்ந்துகொள்கிறது. அனைத்து வீடுகளிலும் குளிரூட்டு வசதி இல்லாமல் அறைகள் அமைக்கப்படுவதில்லை. இப்படியாக மின்தேவை, குளிரூட்டு அறைகள், குளிர்பதனப் பெட்டி ஆகியன எல்லா வீடுகளிலும் கட்டாயமாக மாறும்போது, மின்தேவை ஒருபுறம் பல மடங்கு அதிகரிக்கும். கரியமில வாயுவும் ஒரு பக்கம் அதிகரித்துக்கொண்டே

போகும்.

அமெரிக்காவில் மக்கள்தொகை குறைவு. அங்கே ஒரு நபர் ஒரு ஆண்டுக்கு 16.4 டன் கரியமில வாயு வெளியேற்றத்துக்குக் காரணமாகிறார். இந்தியாவில் மக்கள்தொகை மிகமிக அதிகம். உலக மக்கள்தொகையில் 17.5% இந்திய மக்கள்தொகை. ஆனாலும் 2012-ஆம் ஆண்டு கணக்கின்படி, ஓர் இந்தியர் மூலம் 1.6 டன் கரியமில வாயுதான் வெளிப்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் தற்போது 20% இந்தியர்கள் முறையான வீடுகள் இல்லாமல் இருக்கிறார்கள். 25% இந்திய வீடுகளில் மின்சாரம் இல்லை.

இவர்கள் அத்தனைபேரும் வசிப்பதற்கு வீடுகளைப் பெற்றாலும், அனைத்து வீடுகளும் மின் இணைப்பு பெற்றாலும், உலக நாடுகள் இங்கே தொழில் தொடங்கினாலும்கூட கரியமில வாயுவைக் கட்டுப்படுத்த முடியும் என்று இந்திய அரசு நம்புவது மூன்று காரணங்களால். 1. இந்தியர்கள் இயற்கையான, இயல்பான வாழ்க்கை முறைக்கு மாறுவது எளிது. 2. இந்தியா முழுவதும் குறைவறக் கிடைக்கும் சூரிய ஒளியை மின்சாரமாக்க முடியும். 3. பசுமைப் பரப்பை 30%-ஆக உயர்த்துதல் ஆகியவற்றின் மூலம் இலக்கை எட்டிவிட முடியும் என்று இந்தியா நம்புகிறது.

இந்தியாவில் மறுசுழற்சி ஆற்றல் மூலம் மின்உற்பத்தி அளவை 2022-ஆம் ஆண்டில் 1.75 லட்சம் மெகாவாட் அளவுக்கு உயர்த்துவது என்று அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில் ஒரு லட்சம் மெகாவாட் சூரியஒளி மூலமும், 60 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை காற்றாலைகள் மூலமும் உற்பத்தி செய்ய உள்ளனர். இந்த இலக்கு எட்டப்படுமேயானால், ஆண்டுக்கு 32 லட்சம் டன் கரியமில வாயு வெளிப்பாடு தவிர்க்கப்படும். அனல் மின்நிலையங்களின் மின்உற்பத்தியைக் குறைத்து, கரியமில வாயு வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்திவிட முடியும்.

ஒவ்வொரு வீடும் தனக்கான மின்தேவையின் 50%-ஐ சூரியஒளியால் பெறும் அளவுக்கு கூரைகளில் சூரியத்தகடுகள் பொருத்துவதும், தெருவிளக்குகள் அனைத்தும் சூரிய ஆற்றலால் எரியும்படி செய்வதும் மிகப்பெரும் மின்சேமிப்பை ஏற்படுத்தும். அனல் மின்நிலையங்களின் மின்உற்பத்தி நேரடியாக தொழிற்கூடங்களுக்கு மட்டுமே போய்ச்சேர வகைசெய்யும்.

காடுவளர்ப்பு நிதி மற்றும் பராமரிப்புத் திட்ட ஆணையத்தின் மூலம் ஆறு பில்லியன் அமெரிக்க டாலர் அளவு நிதியானது இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. பசுமை நெடுஞ்சாலைக் கொள்கையின் படி 1.4 லட்சம் கி.மீ. தொலைவுக்கு இருமருங்கிலும் மரம் நடப்படவுள்ளது.

இந்திய மக்களால் புவிவெப்பம் அதிகரிக்கவில்லை என்பது உண்மையே. எல்லா வீடுகளிலும் நவீன பயன்பாட்டுப் பொருள்கள் நடைமுறைக்கு வந்தாலும்கூட, புவி மண்டலத்தில் நமது கரியமில வாயு பங்கு மிகக் குறைவாகத்தான் இருக்கும். அரசு ஒருபுறம் அதன் பணிகளைச் செய்தாலும், ஒவ்வொருவரும் குளிரூட்டு இயந்திரப் பயன்பாட்டை சற்று குறைத்தல், பகலிலும் மின்விளக்கு, மின்விசிறி தேவைப்படாத பசுமை வீடுகளை பாரம்பரியமுறையில் வடிவமைத்தல், வாகனப் புகையைக் கட்டுப்படுத்துதல், ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மரம் வளர்த்தல் ஆகியவற்றின் மூலம் இந்தியா தனது இலக்கினை எட்ட உதவ முடியும்.

உலகம் இருந்தால்தான் நாம் வாழ முடியும். அதனால் நமக்கும் புவி வெப்பமாதலைத் தடுப்பதில் பங்கு உண்டு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்!

## விவசாயிகளுக்கு விடிவு பிறக்குமா?

பெயரளவில் மட்டுமே விவசாய நாடு என்று போற்றப்படும் நமது நாட்டில் விவசாயத்தைத் தவிர மற்ற அனைத்தும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. அதேபோல, விவசாயிகளைத் தவிர மற்றவர்கள் யாவரும் செல்வச் செழிப்புடனேயே வாழ்கின்றனர். விவசாயிகளின் பிரச்னைக்குத்தான் விடிவுகாலம் பிறக்கவில்லை. இதனால், விவசாயிகளின் தற்கொலை நிகழ்வுகள் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

வேளாண்மை எப்பொழுதெல்லாம் பாதிக்கப்படுகிறதோ, அப்போதெல்லாம் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதும் வழக்கமாகி வருகிறது. கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், கடந்த 1995-இல் 10,720 பேரும், 1996-இல் 13,729 பேரும், 1997-இல் 13,622 பேரும், 1998-இல் 16,015 பேரும், 1999-இல் 16,082 பேரும், 2000-இல் 16,603 பேரும், 2001-இல் 16,415 பேரும், 2002-இல் 17,971 பேரும், 2003-இல் 17,164 பேரும், 2004-இல் 18,241 பேரும், 2005-இல் 17,131 பேரும், 2006-இல் 17,060 பேரும், 2007-இல் 16,632 பேரும், 2008-இல் 16,796 பேரும், 2009-இல் 17,368 பேரும், 2010-இல் 15,964 பேரும், 2011-இல் 14,024 பேரும், 2012-இல் 13,754 பேரும், 2013-இல் 11,772 பேரும், 2014-இல் 12,360 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதற்கு பல்வேறு காரணங்களை முன்வைத்துள்ள தேசிய குற்ற ஆவணக் காப்பகம், வங்கிக் கடனை செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளே அதிகம் எனக் குறிப்பிட்டுள்ளது. குடும்பப் பிரச்னை, பயிர் இழப்பு போன்ற காரணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது காலங்காலமாக நிகழ்ந்து

வந்தபோதிலும், அது வெளி உலகுக்கு சரிவரத் தெரியாமல் மத்திய, மாநில அரசுகளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாகவே இருந்து வந்தது. ஆனால், நிலம் கையகப்படுத்துதல் மசோதாவுக்கு எதிராக, ஆம் ஆத்மி கட்சி சார்பில் தில்லி ஜந்தர் மந்தரில் கடந்த ஏப்ரல் 22-ஆம் தேதி நடைபெற்ற போராட்டத்தின்போது, ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த விவசாயி கஜேந்திர சிங் மரத்தில் ஏறி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டபோதுதான் பொதுமக்கள் விழித்துக் கொண்டனர்.

இச்சம்பவம் பொதுமக்கள், விவசாயிகளிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கவனிக்காமல் விட்ட அரசியல்வாதிகளுக்கு சவுக்கடிபோல் அமைந்தது. இதையடுத்து, விவசாயிகளின் தற்கொலைகளைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மத்திய, மாநில அரசுகளுக்கு வழிகாட்ட வேண்டும் என்று ஏப்ரல் 25-ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடுக்கப்பட்டது.

இதனிடையே, விவசாயிகள் தற்கொலை தொடர்பான புள்ளி விவரத்தை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டதால், நாடாளுமன்றத்திலும் விவசாயிகள் தற்கொலை விவகாரம் பெரிய அளவில் விஸ்வரூபம் எடுத்தது. மேலும், மத்திய அரசுக்கு எதிர்க்கட்சிகள் கடும் நெருக்கடி கொடுக்கத் தொடங்கின.

நமது நாடு முழுக்க முழுக்க விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளது. விவசாயி சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்று உதட்டளவில் மட்டுமே பேசி வருகிறோமே தவிர, விவசாயிகளுக்கும், விவசாயத்துக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க மத்திய, மாநில அரசுகள் தவறிவிடுகின்றன.

அதற்கேற்றார்போல், பருவநிலையும் விவசாயிகளை வஞ்சித்து வருகிறது. குறிப்பாக, கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவில் குறிப்பிடத்தக்க அளவுக்கு விவசாயம் நடைபெறவில்லை. இதன்

காரணமாக, பல விவசாய நிலங்கள் இன்று வீட்டுமனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும் மாறி வருகின்றன.

நமது நாட்டில் விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டுமெனில், விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளையும், சலுகைகளையும் மத்திய, மாநில அரசுகள் வழங்கியாக வேண்டும். பருவமழை பொய்த்து பயிர்கள் கருகும்போதும், வெள்ளம் வந்து பயிர்கள் அழுகும்போதும் தென்னைமரம் கருகினால் ரூ.100ம், வாழை சேதமடைந்தால் ஏக்கருக்கு ரூ.1,000-மும் வழங்கினால் போதாது. பயிர்களை உற்பத்தி செய்ய ஆகும் செலவை ஈடுகட்டும் வகையில் இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும்.

அடுத்ததாக, நதிகளை தேசியமயமாக்க வேண்டும். இந்தியாவில் ஆண்டுதோறும் 70,000 டி.எம்.சி. தண்ணீர் உற்பத்தியாகிறது. இதில், 20,000 டி.எம்.சி. தண்ணீரை மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம். மீதமுள்ள 50,000 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. இதைத் தடுக்க வேண்டுமானால், நதிகளை தேசியமயமாக்கியே தீரவேண்டும்.

எந்த ஒரு பொருளைத் தயாரிக்கும் நிறுவனங்களும், தங்களது உற்பத்திப் பொருளுக்கான விலையை தாங்களே நிர்ணயிக்கின்றன. ஆனால், விவசாயிகளால் தங்களது உற்பத்திப் பொருள்களுக்கு தங்களால் விலை நிர்ணயம் செய்ய முடியவில்லை. நெல்லில் இருந்து கரும்பு வரை அரசே விலை நிர்ணயம் செய்கிறது. இந்த நிலை மாற வேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்யக்கூடிய காலம் வர வேண்டும். அப்போதுதான், நமது நாட்டில் விவசாயமும் செழிக்கும், விவசாயிகளும் செழிப்புடன் வாழ்வார்கள்.

**கால்நடை மருத்துவ முகாம்**

உசிலம்பட்டி அருகே கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரியின் ஊரகவியல் துறை கால்நடை மருத்துவமனை மற்றும் கருமாத்தூர் அரசு கால்நடை மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கால்நடை மருத்துவ முகாம் கிராம்பட்டி கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இம்முகாமில் விவசாய சங்க தலைவர் எம்.மணி வரவேற்றார். கல்லூரி முதல்வர் பேசில் சேவியர் முகாமினை துவக்கி வைத்துப் பேசினார். ஊரகவியல் துறைத் தலைவர் ஆரோக்கியராஜ் தலைமை வைத்து பேசினார். புள்ளநேரி ஊராட்சி மன்ற தலைவர் பசுபதி தங்கராஜ், கண்ணனூர் ஒன்றிய கவுன்சிலர் தேவராஜ் வாழ்த்துரை வழங்கினர்.

கால்நடை மருத்துவர்கள் எஸ்.பி.மலர்கண்ணன் மற்றும் பி.ரவிச்சந்திரன் ஆகியோர் 372 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். முகாம் ஒருங்கிணைப்பாளர் மரிய ஜோசப் மகாலிங்கம், உதவிப் பேராசிரியர்கள் பாண்டீஸ்வரி, ஜேம்ஸ் வசந்த், ஜான்சி ராமன், கே.முனியாண்டி ஆகியோர் முகாமிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

கொடைக்கானலில் தொடர்ந்து மழை பெய்து வந்தாலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறையவில்லை.

கொடைக்கானலில் இரண்டாம் கட்ட சீசன் தொடங்கியுள்ளதால், கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்து வருகிறது. எனினும், சுற்றுலாப் பயணிகள் வரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை காலை முதல் மேகமூட்டமும், லேசான வெயிலும் மாறி மாறி நிலவி வந்தன.

சுற்றுலா இடங்களான வெள்ளிநீர் வீழ்ச்சி, பசுமைப் பள்ளத்தாக்கு, பில்லர் ராக், குணா குகை, பிரையண்ட் பூங்கா, கோக்கர்ஸ் வாக்,

மியூசியம், வட்டக்கானல் அருவி உள்ளிட்ட இடங்களில் பயணிகள் வருகை அதிகமாகக் காணப்பட்டனர். தொடர்ந்து, மாலையில் பரவலாக ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மழை பெய்தது. இந்த மழையையும் பொருட்படுத்தாமல், ஏரியில் பயணிகள் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். இரவில், அதிகமான குளிர் நிலவியது.

**"வன உயிரினங்கள் வாழ பொதுமக்கள் விழிப்புணர்வு பெறுவது அவசியம்'**

வன உயிரினங்கள் எதிர்காலத்திலும் நிலைத்திருக்க வேண்டுமெனில், 98 சதவீத மக்கள் விழிப்புணர்வு பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் புவி அமைப்பு, பல்வேறு வகையான உயிரினங்கள் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது. சுமார் 6 லட்சம் சதுர கி.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தியக் காடுகளில், 372 வகையான பாலூட்டி, 1,330 பறவை இனம், 399 வகை ஊர்வன, 181 வகையான நீர் மற்றும் நில வாழ்வன, 1,693 வகை மீன்கள், 60 ஆயிரம் வகை பூச்சி இனங்கள் உள்ளன. அரிய வகை விலங்குகள் வாழ்வதற்கான சூழல், அதிகபட்சமாக மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலேயே அமைந்துள்ளது. இந்த நிலையில், கடந்த இரு நூற்றாண்டுகளாக பெருகிவரும் மக்கள் தொகையால், காடுகளும், பல அரிய வகை உயிரினங்களும் அழிந்து வருகின்றன.

அழிந்த வன உயிரினங்கள்: சிவிங்கிப் புலி, இருகொம்பு காண்டாமிருகம் உள்ளிட்ட பல விலங்குகள் முற்றிலும் அழிந்துவிட்டன. அந்த வரிசையில், இமயமலை பனிச் சிறுத்தை, இந்திய ஓநாய், வரிக்கழுதைப் புலி, காட்டு கழுதை, இரலைமாடு, பெரிய வரகுக்கோழி, பொன்கழுகு,

செந்தலை வாத்து போன்ற உயிரினங்களின் வாழ்வும் முடிவுக்கு வந்துவிட்டன.

கடந்த 100 ஆண்டுகளில் மட்டும், 36 வகையான பாலூட்டி வன விலங்குகளும், 300 வகை பறவை இனங்களும் அழிவைச் சந்தித்துள்ளதாக, இயற்கை ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். விவசாய நிலங்களை அதிகரிப்பதற்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. மூட நம்பிக்கை மற்றும் விற்பனை செய்வதற்காக வன விலங்குகள் அதிக அளவில் வேட்டையாடப்படுகின்றன. அடர்ந்த காடுகளுக்கும், வன விலங்குகளின் பெருக்கத்துக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இதில் ஒன்று பாதிக்கப்பட்டாலும், மற்றொன்று இயல்பாகவே அழிந்துவிடும்.

இது சம்பந்தமாக, அனைத்துத் தரப்பினரும் விழிப்புணர்வு பெற்று காடுகளும், வன விலங்குகளும் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்பதே, இயற்கை ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது.

இது குறித்து, கொடைக்கானல் வன அலுவலர் து. வெங்கடேஷ் தெரிவித்தது: தமிழகத்தின் மொத்த வனப் பரப்பளவில் (22,877 ச.கி.மீ) சுமார் 6,708 ச.கி.மீ. வன உயிரினங்களுக்கான பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய வனக் கொள்கையின்படி, மொத்த காடுகளின் பரப்பளவில் 25 சதவீதப் பகுதி வன உயிரினங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். தமிழகத்தைப் பொருத்தவரை, 29.32 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் அக்டோபர் 2 முதல் 8 ஆம் தேதி வரை, வன உயிரினப் பாதுகாப்பு வார விழா கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், வன உயிரினங்களின் பெருக்கத்தின் முக்கியத்துவம் குறித்து 2 சதவீத மக்கள் மட்டுமே அறிந்துள்ளனர். அரசு தரப்பில் பல்வேறு முயற்சிகள்

மேற்கொண்டாலும், பொதுமக்களின் பங்களிப்பு அவசியம். அதன்மூலமே, காடுகளை அழிவிலிருந்தும், உயிரினங்கள் கொல்லப்படுவதிலிருந்தும் தடுக்க முடியும் என்றார் அவர்.

**தேசிய பூங்கா**

வன விலங்குகளைப் பாதுகாக்க, நாட்டின் பல்வேறு பகுதிகளில் 54 தேசிய பூங்கா (21 ஆயிரம் ச.கி.மீ.) மற்றும் 372 வன உயிரினச் சரணாலயம் (89 ஆயிரம் சகி.மீ.) உள்ளன. தமிழகத்தில் மட்டும் 5 தேசிய பூங்கா, தலா 14 வன உயிரினச் சரணாலயம் மற்றும் பறவைகள் சரணாலயங்கள் அமைந்துள்ளன.

**கால்நடை மருத்துவ முகாம்**

உசிலம்பட்டி அருகே கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரியின் ஊரகவியல் துறை கால்நடை மருத்துவமனை மற்றும் கருமாத்தூர் அரசு கால்நடை மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கால்நடை மருத்துவ முகாம் கிராம்பட்டி கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இம்முகாமில் விவசாய சங்க தலைவர் எம்.மணி வரவேற்றார். கல்லூரி முதல்வர் பேசில் சேவியர் முகாமினை துவக்கி வைத்துப் பேசினார். ஊரகவியல் துறைத் தலைவர் ஆரோக்கியராஜ் தலைமை வைத்து பேசினார். புள்ளநேரி ஊராட்சி மன்ற தலைவர் பசுபதி தங்கராஜ், கண்ணனூர் ஒன்றிய கவுன்சிலர் தேவராஜ் வாழ்த்துரை வழங்கினர்.

கால்நடை மருத்துவர்கள் எஸ்.பி.மலர்கண்ணன் மற்றும் பி.ரவிச்சந்திரன் ஆகியோர் 372 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். முகாம் ஒருங்கிணைப்பாளர் மரிய ஜோசப் மகாலிங்கம், உதவிப் பேராசிரியர்கள்

பாண்டீஸ்வரி, ஜேம்ஸ் வசந்த், ஜான்சி ராமன், கே.முனியாண்டி ஆகியோர் முகாமிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## வீடுதோறும் மரம் வளர்க்க வேண்டும்:கிராம சபைக் கூட்டத்தில் வலியுறுத்தல்

தருமபுரி மாவட்டம் உதயமாகி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் வகையில் வீடுகள் தோறும் மரம் வளர்க்க வேண்டும் என ஆட்சியர் கே.விவேகானந்தன் வலியுறுத்தினார்.

காந்தி ஜெயந்தியையொட்டி, மாவட்டத்தில் உள்ள 251 கிராம ஊராட்சிகளில் சிறப்பு கிராம சபைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், போதைமலைக்காடு ஊராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியது: போதைமலைக்காடு ஊராட்சியில் பெரும்பாலும் பழங்குடியினர் வசிக்கும் அனைத்து வீடுகளில் தனிநபர் கழிப்பறை கட்டி பயன்படுத்தியும், மகளிர் சுகாதார வளாகம், அங்கன்வாடி கழிப்பறைகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது.

திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத ஊராட்சியாகத் தேர்வு செய்வதற்கு அறிவிக்கக் கோரும் கருத்துருவை ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ளீர்கள். இது தொடர்பாக, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தின், பொன் விழா ஆண்டை நினைவு கூறும் வகையில், வீட்டிற்கு ஒரு மரக்கன்று நட்டு, வளர்க்க வேண்டும். அதன் ஒரு பகுதியாக இந்த ஊராட்சியில், 50 மரக்கன்றுகள் நடப்படுகின்றன.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் முகவரி மாற்றம் மற்றும் 1.1.2016 அன்று 18 வயது நிரம்பியவர்கள் குறிப்பாக இளம் வாக்காளர்கள் அக். 4 மற்றும் 11-ஆம் தேதிகளில் அருகே உள்ள வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதைச் சரிபார்த்து, இல்லாத பட்சத்தில் அங்குள்ள அலுவலரிடம் விண்ணப்பித்து சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

திட்ட இயக்குநர் தி.ஸ்ரீதர், செயற்பொறியாளர் அருள்செல்வி, உதவி செயற் பொறியாளர் ராதாகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செழியன், அன்பழகன் வட்டாட்சியர் மணி, ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயராமன், அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

## ராகியில் மதிப்புக்கூட்டியஉணவு தயாரிப்பு பயிற்சி முகாம்

பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ராகியில் மதிப்புக் கூட்டப்பட்ட உணவு தயாரிப்பு குறித்த பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) ம.அ.வெண்ணிலா தொடக்கி வைத்தார்.

ராகியின் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள், ஆரோக்கியப் பயன்கள், மாற்று உணவுகளான ராகி குக்கீஸ், தோசை, சப்பாத்தி, நூடுல்ஸ், பகோடா போன்ற உணவுகள் தயாரிப்பு, சந்தைப்படுத்துதல் குறித்து பேராசிரியை கி.ஜோதிலட்சுமி பயிற்சி அளித்தார்.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகள், இளைஞர்கள், ஊரக மகளிருக்கு பயிற்சிக் கையேடு வழங்கப்பட்டது.

## ஏற்காட்டில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

ஏற்காட்டில் சுற்றுலாப் பயணிகள் வெள்ளிக்கிழமை குவிந்தனர்.

தொடர் விடுமுறையால் ஏற்காட்டில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது. பள்ளிகளுக்கு காலாண்டுத் தேர்வு விடுமுறை மற்றும் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் பெங்களூரு, கேரளத்தில் இருந்து சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகின்றனர்.

இதனால் இங்குள்ள தங்கும் விடுதிகள் நிரம்பி உள்ளன. உணவு விடுதிகள், சுற்றுலாப் பகுதியான படகு இல்லம், மான் பூங்கா, அண்ணா பூங்கா, ஏரி பூங்கா, லேடிசீட், ரோஜா தோட்டம், பக்கோடபாயின்ட், ரெட்ரீட், கிளியூர் நீர்வீழ்ச்சி ஆகிய பகுதிகளில் ஏராளமான சுற்றுலாப் பயணிகளை காண முடிந்தது.

தற்போது இதமான தட்பவெப்பமும், அடிக்கடி மழையும் பெய்து வருவதால் ஏற்காடு குளிர்ந்து காணப்படுகிறது.

**மேட்டூர் அணை நீர்மட்டம் குறையத் தொடங்கியது**

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்ததால் அணையின் நீர்மட்டம் சரியத் தொடங்கியது. காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவும் படிப்படியாகக் குறைந்து வருகிறது. இதனால், வியாழக்கிழமை காலை 70.60 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை காலை 70.46 அடியாக சரிந்தது. வெள்ளிக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 9039 கனஅடி வீதம தண்ணீர் வந்து கொண்டிருந்தது. காவிரி டெல்டா பாசனத்துக்கும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கும் நொடிக்கு 10,600 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 33.09 டி.எம்.சியாக இருந்தது.

**ரயில் நின்று செல்ல வலியுறுத்தி ரயில் மறியல் போராட்ட அறிவிப்பு**

மேட்டூர்-சேலம் ரயில் தொளசம்பட்டியில் நின்று செல்ல வலியுறுத்தி, ரயில் மறியல் போராட்டம் நடத்தப் போவதாக, தேசிய நலக் கட்சியின் தேசிய தலைவர் ஜி.மஞ்சுளா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொளசம்பட்டியில் உள்ள ரயில் நிலையத்தில் ஏற்கெனவே நின்று சென்ற மேட்டூர் -சேலம் பயணிகள் ரயில் தற்போது நிறுத்தப்படுவதில்லை. இதைக் கண்டித்து, தேசிய நலக் கட்சி சார்பில், விரைவில் ரயில் மறியல் போராட்டம் நடத்த உள்ளோம். இதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

காவிரி நதிநீர்ப் பிரச்னையில் தமிழக மக்களுக்கு துரோகம் செய்யும் கர்நாடக அரசின் செயல் கண்டிக்கத்தக்கது. மத்திய அரசு உடனே சீர் செய்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டி.எஸ்.பி. விஷ்ணுபிரியாவின் தற்கொலைக்கு காரணமானவர்களை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதொடர்பான வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும்.

லாரி உரிமையாளர்களின் வேலைநிறுத்த பிரச்னையில் மத்திய அரசு தலையிட்டு சுமுகத் தீர்வு காண வேண்டும். விவசாயிகளின் குறைகளைத் தீர்த்து தேசிய அளவில் நதிகளை இணைக்க வேண்டும் என்றார்.

## "மீனவர்கள் கடல் வளத்தை பாதுகாக்க வேண்டும்'

தடைசெய்யப்பட்ட வலைகளை மீனவர்கள் பயன்படுத்தாமல் கடல் வளத்தை பாதுகாக்க முன்வர வேண்டும் என ஆட்சியர் சு. கணேஷ் அறிவுறுத்தினார்.

புதுகை மாவட்டம், மணமேல்குடியில் புதன்கிழமை மீன்வளத்துறை சார்பில் நடைபெற்ற மீனவர்கள் குறைகேட்பு முகாமில் அவர் மேலும் பேசியது: மீனவர்களின் குறைகேட்பு முகாமில் பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், மணமேல்குடி ஒன்றியம், கிருஷ்ணாஜிபட்டினம், கீழமஞ்சக்குடி

கிராமத்தில் ரூ.30 லட்சம் மதிப்பில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று கொடிக்குளம் கிராமத்தில் ரூ. 10.5 லட்சம் மதிப்பில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் மீனவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தாமல் கடல் வளத்தைப் பாதுகாக்க முன் வர வேண்டும் என்றார் ஆட்சியர். இக்கூட்டத்தில் மீன்வளத்துறையின் சார்பில் குழு விபத்து காப்புறுதித் திட்டத்தில் ஒரு நபருக்கு ரூ. 50 ஆயிரமும், இந்திரா காந்தி தேசிய முதியோர் உதவித்தொகை 10 பேருக்கும் என மொத்தம் 67 பயனாளிகளுக்கு ரூ. 7.59 லட்சத்தில் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்.

இதில், வருவாய் கோட்டாட்சியர் ரா. ரம்யாதேவி, வட்டாட்சியர் அன்பையன், மணமேல்குடி ஒன்றியக்குழு துணைத்தலைவர் சின்னக்கருப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### வேளாண் அறிவியல் நிலையத்தில் கால்நடை வளர்ப்பு பயிற்சி

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வணிக ரீதியிலான கால்நடைகள் வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு பற்றிய ஒரு நாள் இலவச பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

இதில் திரளான மகளிர் விவசாயிகள் மற்றும் அன்பில் தர்மலிங்கம் விவசாய கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இப் பயிற்சியில் முக்கியமாக ஆடு வளர்ப்பு பற்றிய தகவல்கள், பராமரிப்பு முறைகள், பரண் அமைப்பது, நோய் தடுப்பு முறைகள் மற்றும் நோய் தாக்கிய பின் செய்ய வேண்டிய மருத்துவம் பற்றி செயல்விளக்கம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியில் கால்நடை உதவி மருத்துவர் மரு.க. மகேந்திரன் பங்கேற்று விவசாயிகளுக்கு பயிற்சியளித்தார். தொடர்ந்து நீடமங்கலத்தில் வேளாண் அறிவியல் நிலையத்தில் உள்ள பரண் மேல் வெள்ளாடு வளர்ப்பு கொட்டகையில் செயல் விளக்க முறைகளை வேளாண் அறிவியல் நிலையத்தை சேர்ந்த உதவிப் பேராசிரியர் செ.சரவணன் பயிற்சி அளித்தார்.பயிற்சிக்கான ஏற்பாட்டை தெ.ரேகா திட்ட உதவியாளர் (தொழில்நுட்பம்) மற்றும் பண்ணை மேலாளர் துரை.நக்கீரன் செய்திருந்தனர்.

## நெல் குவிண்டாலுக்கு ரூ. 250 ஊக்கத்தொகை வழங்க வலியுறுத்தல்

தமிழக அரசு நெல் குவிண்டாலுக்கு ரூ. 250 ஊக்கத்தொகை வழங்க வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து சங்க மாநில துணைச் செயலர் மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கை:தமிழக அரசு 2015 அக்டோபர் 1-ம் தேதி முதல் நெல்லுக்கு ஊக்கத்தொகை குவிண்டாலுக்கு ரூ. 50 உயர்த்தி வழங்கப்படுமென அறிவித்துள்ளது. இதன்படி, குவிண்டால் சன்ன ரகம் ரூ. 1,520, மோட்டா ரகம் ரூ. 1,460 என அறிவித்து அமலாக்கியுள்ளது.

2015 ஜூலை மாதம் மத்திய அரசும் ரூ. 50 விலை உயர்வை அறிவித்தது. இவ்விலை போதுமானதாக இல்லை என விவசாயிகள் போராடி வரும் நிலையில், தமிழக அரசு ரூ. 50 மட்டும் உயர்த்தி வழங்கியிருப்பது வேதனையளிக்கிறது. தேசிய விவசாயிகள் ஆணையம் உற்பத்திக்கான செலவில் 50 சதவீதம் சேர்த்து விலையாக அறிவிக்க வேண்டுமென பரிந்துரை செய்து 3 ஆண்டுகள் ஆகியும் இதுகுறித்து மத்திய, மாநில அரசுகள் பரிசிலிக்கத் தயாராக இல்லை.

உற்பத்திக்கான செலவு 20 சதவீதம் அதிகரித்திருக்கும் நிலையில் நெல்லுக்கு மட்டும் 3.5 சதவீதம் விலை உயர்வு என்பது வேதனையாகும்.

கடந்த ஆண்டை விட தற்போது ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள், நெல் நடவு இயந்திரத்தின் வாடகை, தொழிலாளர்களின் ஊதியம் ஆகிய அனைத்தும் கூடியிருக்கும் நிலையில் வறட்சி மற்றும் ஒரு போக சம்பா பயிரிடுவ தே கேள்விக்குறி. இத்தகைய சூழலில் தமிழ்நாடு அரசு நெல் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளை பாதுகாக்க நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 250 ஊக்கத்தொகை வரும் பருவம் முதல் வழங்க வேண்டும்.

**கல்லூரியில் உணவுத் திருவிழா**

மேலத்திடியூரில் உள்ள பி.எஸ்.என். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பாரம்பரிய உணவுத் திருவிழா நடைபெற்றது.

இக் கல்லூரியின் எகோ கிளப் சார்பில் நடைபெற்ற இவ் விழாவை, கல்லூரி முதல்வர் சதாசிவம் தொடங்கிவைத்தார். சிறுதானியங்களின் நன்மைகள், பாரம்பரிய உணவுகளால் கிடைக்கும் நன்மைகள் ஆகியவை குறித்து விளக்கப்பட்டது. கிளப் ஒருங்கிணைப்பாளர்களான உதவிப் பேராசிரியர்கள் ரா.சுப்பிரமணியன், ஆ.நிக்கல்சன், அ.சரவணன், த.சரவணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை**

திருநெல்வேலி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென தென்னாடு மூவேந்தர் கழகம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் கே.பி.சரவணபாண்டியன் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியதாவது: இம்மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பெய்த தொடர் மழை காரணமாக ஏராளமான வாழைகள் சரிந்து விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் துறையினரும் மற்றும் மாவட்ட நிர்வாகமும்

கணக்கெடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

மத்திய அரசு சுங்கச்சாவடிகளை மூட வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் வெள்ளநீர்க் கால்வாய்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். பொலிவுறு நகரங்களுக்கு பதிலாக தொழில் நகரங்களாக மாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தென்தமிழக பகுதிகளில் வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும் என்றார் அவர்.

பேட்டியின்போது மாநில பொருளாளர் பொன் என்.எஸ்.குமார், மாநில துணைப் பொதுச் செயலர் எம்.செல்லத்துரை, மாவட்ட துணைச் செயலர் எம்.அசோக்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## வேளாண் விழிப்புணர்வு முகாம்

திண்டிவனம் உழவர் பயிற்சி நிலையத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் மண் பரிசோதனை அடிப்படையில் ஊட்டச்சத்து நிர்வாகம் குறித்த விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குநர் ஆ.ரத்தினசபாபதி வசாயிகள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

வேளாண்மை துணை இயக்குநர் பா.தேவநாதன் வரவேற்றார். முகாமில் மண்வள அட்டை இயக்கம் மற்றும் மண், நீர் மாதிரி எடுத்தலின் முக்கியத்துவம், இயற்கை உரங்களால் ஏற்படும் நன்மைகள் உள்ளிட்டவை குறித்து வேளாண்மை உதவி இயக்குநர்கள் ஏ.ஜெ.கென்னடி ஜெபக்குமார், எம்.சுகுமார், பேராசிரியர் எம்.சி.பிரபு ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

முகாமில் மண் மற்றும் நீர் பரிசோதனை செயல்விளக்கம், மத்திய, மாநில வேளாண் திட்டங்கள் குறித்து வேளாண்மை அலுவலர்கள் க.வேதவல்லி,

கே.மகாலட்சுமி, இ.சுஜாதா, எ.சரஸ்வதி, சி.எத்திராஜ், செந்தில்குமார் ஆகியோர் பயிற்சிஅளித்தனர். விவசாயிகளுக்கு மண், நீர் பரிசோதனை தொழில்நுட்பக் கையேடுகள் வழங்கப்பட்டன.

**காளான் வளர்ப்புப் பயிற்சி**

திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

இதில் காளான் வித்துகள், காளான் படுக்கைகள் தயாரிப்பு, காளான் குடில் அமைப்பு மற்றும் பராமரிப்பு, களை மற்றும் பூச்சி கட்டுப்பாடு, காளான் அறுவடை முறை உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஒருங்கிணைப்பாளர் கு.கவிதா பயிற்சியளித்தார். இதில், வேளாண் அறிவியல் நிலையத்தில் முன்பதிவு செய்திருந்த விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 50 விவசாயிகள் பங்கேற்றனர்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டி ரூ.8,300 கோடி நிதி கேட்டு மத்திய அரசுக்கு கடிதம் மந்திரி கிருஷ்ணபைரே கவுடா பேட்டி**



சிக்கமகளூரு,

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டி ரூ.8,300 கோடி நிதி கேட்டு மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது என்று மந்திரி கிருஷ்ணபைரே கவுடா தெரிவித்துள்ளார்.

<u>வறட்சி பகுதிகளை மந்திரி ஆய்வு</u>

சிக்கமகளூரு மாவட்டம் கடூர் தாலுகா வறட்சி தாலுகாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை மாநில விவசாய துறை மந்திரி கிருஷ்ணபைரே கவுடா கடூருக்கு வந்தார். அங்கு அவர் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளான தங்கலிதாண்டியா, எகட்டி, கொப்பாலு ஆகிய கிராமங்களுக்கு சென்று ஆய்வு செய்தார். பின்னர் விவசாயிகளை சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் அவர் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தக்க நிவாரணம் வழங்குவதாக உறுதி அளித்தார்.

ஹொச்சிஹள்ளி கிராமத்தில் கடன் தொல்லையால் தற்கொலை செய்துகொண்ட விவசாயி மதிப்பா வீட்டுக்கு சென்ற கிருஷ்ணபைரே கவுடா, அவருடைய குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதையடுத்து ரூ.2 லட்சம் நிவாரணத்திற்காக காசோலையை அவர்களிடம் வழங்கினார்.

பின்னர் அங்கு கிருஷ்ணபைரேகவுடா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–

<u>ரூ.8,300 கோடி நிதி ஒதுக்க கடிதம்</u>

கர்நாடகத்தில் பருவமழை பொய்த்ததால் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. இதனால் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டு வருகிறார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து வருகிறோம். இதுபற்றி அறிக்கை தயார் செய்து மத்திய அரசுக்கு வழங்கப்படும். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ரூ.8,300 கோடி நிதி கேட்டு மத்திய அரசுக்கு கடிதம்

எழுதி உள்ளோம். இதில் ரூ.2,270 கோடியை உடனடியாக ஒதுக்கும்படி கோரிக்கை வைத்துள்ளோம்.

மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தாலுகாவுக்கு ரூ.50 லட்சம் நிவாரணம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் விளைவிக்கும் ராகியை அரசே கொள்முதல் செய்து வருகிறது. விவசாயிகள் யாரும் இடைதரகர்கள் மூலம் ராகியை விற்பனை செய்ய வேண்டாம். நேரடியாக அரசு விற்பனை மையத்தில் விற்பனை செய்ய வேண்டும்.

இவ்வாறு மந்திரி கிருஷ்ணபைரே கவுடா கூறினார்.

## 2–வது நாளாக லாரி ‘ஸ்டிரைக்’: மளிகை பொருட்களின் விலை மேலும் உயரும் அபாயம்



2–வது நாளாக லாரி ‘ஸ்டிரைக்’ நடைபெற்று வருவதால் புதுவையில் மளிகை பொருட்களின் விலை மேலும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2–வது நாளாக லாரி ‘ஸ்டிரைக்’

தேசிய நெடுஞ்சாலைகளில் விதிமுறைகளை மீறி அமைக்கப்பட்டுள்ள சுங்கச்சாவடிகளை அகற்ற வேண்டும், சுங்கச்சாவடி கட்டணத்தை ஆண்டுக்கு ஒரு முறை வாகன உரிமையாளர்களிடம் இருந்து பெற வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய மோட்டார் போக்குவரத்து காங்கிரஸ் சார்பில் கடந்த 1–ந் தேதி முதல் அகில இந்திய அளவில் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் தொடங்கியது.

இந்த போராட்டம் நேற்று 2–வது நாளாக தொடர்ந்து நடந்தது. போராட்டத்தால் புதுவையில் மட்டும் 5 ஆயிரம் லாரிகள் ஓடவில்லை. மேட்டுப்பாளையத்தில் உள்ள கனரக ஊர்தி முனையத்தில் நூற்றுக்கணக்கான லாரிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

<u>விலை உயரும் அபாயம்</u>

இந்த போராட்டத்தின் காரணமாக புதுவை மாநிலத்திற்கு வெளிமாநிலத்தில் இருந்து காய்கறிகள், மளிகை பொருட்கள் வரவில்லை.

ஏற்கனவே விலைவாசி உயர்ந்துள்ள நிலையில் தற்போது 2–வது நாளாக லாரி உரிமையாளர்கள் போராட்டம் நடைபெற்று வருவதால் விலைவாசி மேலும் உயர்ந்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் போராட்டம் இன்னும் தொடர்ந்து நடைபெற்றால் பொருட்களின் விலைவாசி இன்னும் உயர வாய்ப்பு உள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்

## சோலையார் அணையின் நீர்மட்டம் 128 அடியை எட்டியது



வால்பாறை பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக சோலையார் அணையின் நீர்மட்டம் 128 அடியை எட்டி உள்ளது.

சோலையார் அணை

வால்பாறை பகுதியில் கடந்த 2 வாரங்களுக்கு மேல் கன மழை பெய்து வருகிறது. அவ்வப்போது விடிய, விடிய மழை கொட்டி தீர்த்தது. இந்த தொடர் மழை காரணமாக சோலையார் அணைக்கு தொடர்ந்து நீர்வரத்துக்கு அதிகரித்தது. இதனால் அணையின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது.

128 அடி நீர்மட்டம்160 அடி கொள்ளளவு கொண்ட சோலையார் அணையின் நீர்மட்டம் நேற்றைய நிலவரப்படி 128.75 அடியாக உள்ளது. சோலையார் அணையில் 50 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. சோலையார் அணைக்கு வினாடிக்கு ஆயிரத்து 83 கனஅடி தண்ணீர்

வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து 738 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அதாவது சோலையார் மின்நிலையம் ஒன்று இயக்கப்பட்டு 738.45 கனஅடி தண்ணீர் மின்உற்பாத்திக்கு பின் பரம்பிக்குளம் அணைக்கு வெளியேற்றப்பட்டு வருகிறது.தென்மேற்கு பருவ மழை காரணமாக வால்பாறை பகுதியில் உள்ள நகராட்சி குடிதண்ணீர் தேக்கமான அக்காமலை தடுப்பணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும், பரம்பிக்குளம் அணைக்கும் தண்ணீர் வரத்து ஏற்பட்டுள்ளது. இதே நிலை தொடர்ந்தால் சோலையார் அணை நீர்மட்டம் விரைவில் 130 அடியை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விடுமுறையை யொட்டி பிச்சாவரத்தில் குவிந்த சுற்றுலா பயணிகள்



பரங்கிப்பேட்டை,

விடுமுறையை யொட்டி பிச்சவாரத்தில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

<u>மாங்குரோவ் காடுகள்</u>

சிதம்பரம் அருகே பிச்சாவரம் சுற்றுலா மையத்தில் மருத்துவ குணம் கொண்ட மாங்குரோவ் காடுகள் உள்ளது. இந்த காட்டில் 3 ஆயிரத்து,440

கிளை வாய்க்கால்கள் உள்ளன. அழகு நிறைந்த இந்த காட்டு பகுதிகளை பார்த்து ரசிக்க உள்ளூர் பகுதி மக்கள் மட்டும் இன்றி வெளி மாநிலத்தை சேர்ந்த சுற்றுலா பயணிகளும் இங்கு அதிக அளவில் வந்து செல்கின்றனர். இதனிடையே கடந்த ஒரு மாதமாக பயணிகளின் வருகை குறைந்ததன் காரணமாக பிச்சாவரம் சுற்றுலா மையம் வெறிச்சோடி காணப்பட்டது.

இந்த நிலையில் பள்ளி காலாண்டு தேர்வு மற்றும் காந்தி ஜெயந்தி விடுமுறையை யொட்டி பிச்சாவரம் சுற்றுலா மையத்திற்கு நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். பின்னர் அவர்கள் பாதுகாப்பு கவச உடை அணிந்து மோட்டார் மற்றும் துடுப்பு படகு மூலம் மாங்குரோவ் காடுகளை சுற்றிவந்து கிளை வாய்க்கால்களை ரசித்தனர். அப்போது பயணிகள் பலர் தங்களது செல்போன்களில் செல்பிபடம் எடுத்துக்கொண்டனர். தொடர்ந்து சுற்றுலா பயணிகள் அங்குள்ள குடில்களில் குடும்பத்தினருடன் அமர்ந்து தாங்கள் கொண்டு வந்த உணவை சாப்பிட்டனர். இதையடுத்து சுற்றுலா மையத்தில் சிறுவர்கள் விளையாடி மகிழ்ந்தனர்.

## மாவட்டம் முழுவதும் பரவலாக மழை அதிகபட்சமாக கீழசெறுவாயில் 90 மில்லி மீட்டர் பதிவு



மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக கீழசெறுவாயில் 90 மில்லி மீட்டர் மழை பதிவாகியது.

கன மழைகடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைத்து வந்தது. இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர். இந்நிலையில் கடந்த 2 நாட்களாக பகலில் வெயிலும், இரவில் மழையும் பெய்து வருகிறது. அதன்படி நேற்று முன்தினம் இரவு கடலூரில் சிறிது நேரம் கன மழை பெய்தது. அதன் பிறகு லேசான சாரலுடன் மழை ஓய்ந்தது.

இதேபோல் சிதம்பரம், தொழுதூர், கீழசெறுவாய், அண்ணாமலைநகர், புவனகிரி, வேப்பூர், லக்கூர் போன்ற பல்வேறு இடங்களிலும் மழை பெய்தது. இதனால் முக்கிய சாலைகளிலும் தாழ்வான இடங்களிலும் மழை நீர் தேங்கி நின்றது.வாகன ஓட்டிகள் சிரமம்
நேற்று காலை வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. ஆனால் மழை இல்லை. அதன்பிறகு வெயில் அடிக்க தொடங்கியது. அதைத்தொடர்ந்து பகல் 11.50 மணி அளவில் மீண்டும் வானம் மேக மூட்டமாக காட்சி அளித்தது. சற்று நேரத்தில் குளிர்ந்த காற்று வீசியதுடன், மழை பெய்ய ஆரம்பித்தது. சற்று நேரத்தில் பலத்த மழையாக கொட்டி தீர்த்தது. 30 நிமிடம் நீடித்த இந்த மழையினால் முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

தாழ்வான இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நின்றது. கடலூர் வேணுகோபாலபுரம் சாலை, பாரதி சாலை, நேதாஜி சாலைகளில் மழை வெள்ளம் தேங்கி நின்றதால் வாகன ஓட்டிகள் சிரமப்பட்டு சென்றனர். சில சாலைகள் சேறும், சகதியுமாக மாறியது.

கீழசெறுவாயில் 90 மில்லி மீட்டர் பதிவுஇதேபோல் மாவட்டம் முழுவதும் பரவலமாக மழை பெய்தது. இருப்பினும் மாவட்டத்தில் நேற்று காலை

8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கீழசெறுவாயில் 90 மில்லி மீட்டர் மழை பதிவாகியது. குறைந்தபட்சமாக புவனகிரியில் 1 மில்லி மீட்டர் மழை பதிவாகியது.மாவட்டத்தில் மற்ற இடங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் விவரம் வருமாறு:-

லக்கூர் - 53

அண்ணாமலைநகர் - 18.40

சிதம்பரம் - 17

வேப்பூர் - 6

கடலூர் - 5

மே.மாத்தூர் - 5

காட்டுமன்னார்கோவில் - 3

தொழுதூர் - 3

## 40 மைக்ரானுக்கு குறைவான பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை கலெக்டர் பிரபாகர் எச்சரிக்கை



ஈரோடு மாவட்டத்தில் 40 மைக்ரானுக்கு குறைவான பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் பிரபாகர் எச்சரிக்கை விடுத்து உள்ளார்.

ஆலோசனை கூட்டம்பிளாஸ்டிக் பயன்பாடு குறித்த ஆலோசனை கூட்டம் ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்துக்கு ஈரோடு மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

பிளாஸ்டிக் பைகள் 40 மைக்ரானுக்கு குறைவாக தயாரிக்கவோ, விற்பனை செய்யவோ கூடாது. பிளாஸ்டிக் கழிவுகளை மறு பயன்பாட்டிற்கும், சிமெண்டு தொழிற்சாலை கலங்களில் எரிக்கவும் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு பிளாஸ்டிக் பைகளிலும் மாசு கட்டுபாட்டு வாரியத்தின் அனுமதி எண், அதன் மைக்ரான் அளவு, எந்த

வகை பிளாஸ்டிக் என்று குறிப்பிட வேண்டும்.

கடுமையான நடவடிக்கைகடைகளில் வாடிக்கையாளர்களுக்கு பிளாஸ்டிக் பைகளை இலவசமாக கொடுக்காமல் விலைக்கு மட்டுமே கொடுக்க வேண்டும். பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து செயல்பட்டு விழிப்புணர்வு முகாம்களை நடத்த வேண்டும்.

வெளிமாநிலம் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து 40 மைக்ரானுக்கு குறைவான பிளாஸ்டிக் பொருட்கள் கொண்டு வரப்பட்டு ஈரோட்டில் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட வாகனங்களும், பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். பிளாஸ்டிக் பொருட்கள் எரிக்கப்படுவதை தடுக்க வேண்டும். அனைத்து பிளாஸ்டிக் தொழிற்சாலைகளும் மாசு கட்டுபாட்டு வாரியத்திடம் அனுமதி பெறுதல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை 15 நாட்களில் செய்து முடிக்க வேண்டும்.

ரூ.1 லட்சம் அபராதமடாஸ்மாக் கடைகள், திருமண மண்டபங்கள், டீக்கடைகள், உணவகங்கள் போன்ற இடங்களில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை தனியாக பிரித்து வைத்து பிளாஸ்டிக் சங்கத்திடம் விற்பனை செய்ய வேண்டும். நிலம், நீர் மாசுபடும் வகையில் வெளியில் கொட்டக்கூடாது. சுற்றுச்சூழலை பாதிக்கும் வகையில் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன், ரூ.1 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும் என்று தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய தலைவரும் தெரிவித்து உள்ளார். எனவே பிளாஸ்டிக்கை ஒழிப்பதில் பொதுமக்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். வீட்டில் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை தனியாக பிரித்து குப்பை சேகரிப்பவர்களிடம் கொடுக்க வேண்டும்.இவ்வாறு கலெக்டர்

எஸ்.பிரபாகர் கூறினார்.கூட்டத்தில் சுற்றுச்சூழல்துறை அதிகாரிகள், மாவட்ட பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்க பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## குமரி மாவட்டத்தில் சாரல் மழை நீடிப்பு



குமரி மாவட்டத்தில் சாரல்மழை நீடித்து வருகிறது.

மழை

இருபருவ மழைப்பொழிவு குறைவில்லா வரம் பெற்ற குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு முதல் விடிய விடிய அவ்வப்போது மழை பெய்துகொண்டே இருந்தது. இது மாவட்டம் முழுவதும் பரவலாக இருந்தது.

காலை 6 மணி நிலவரப்படி குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு

மில்லி மீட்டரில் வருமாறு:-

பேச்சிப்பாறை-5, பெருஞ்சாணி-17.8, சிற்றார் (1) -6, சிற்றார் (2) -8.2, மாம்பழத்துறையாறு-18, இரணியல்-10.2, ஆனைக்கிடங்கு-8, குளச்சல்-6.6, குருந்தன்கோடு-13.4, அடையாமடை-17, கோழிப்போர்விளை-21, முள்ளங்கினாவிளை-37, புத்தன்அணை-16.4, திற்பரப்பு-10.4, நாகர்கோவில்-9, பூதப்பாண்டி-8, சுருளோடு-31.2, கன்னிமார்-24.6, ஆரல்வாய்மொழி-8.2, பாலமோர்-5.8, மயிலாடி-15.2, கொட்டாரம்-25.2, முக்கடல்-22.

தண்ணீர் வரத்து

மழை காரணமாக பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 520 கனஅடியும், பெருஞ்சாணிக்கு 282 கனஅடியும், சிற்றார் (1) அணைக்கு 21 கனஅடியும், சிற்றார் (2) அணைக்கு 58 கனஅடியும் தண்ணீர் வந்தது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று 35.85 அடியாகவும், பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 64.55 அடியாகவும் இருந்தது. வெளியேற்றமாக பேச்சிப்பாறை அணையில் இருந்து 732 கனஅடியும், பெருஞ்சாணியில் இருந்து 24 கனஅடியும் தண்ணீர் பாசனத்துக்காக சென்றது.

இந்த நிலையில் மழை நேற்றும் நீடித்தது. நாகர்கோவில் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று காலை சாரல் மழை பெய்தது. இதைப்போல மார்த்தாண்டம், குலசேகரம், கருங்கல், தக்கலை உள்பட மாவட்டம் முழுவதும் பரவலாக சாரல்மழை பெய்தது. மலையோர பகுதியில் பெய்த தொடர் மழையால் திற்பரப்பு அருவியில் அதிக அளவில் தண்ணீர் கொட்டியது.

சாலை துண்டிப்புகொல்லங்கோடு அருகே கலிங்குநடையில் இருந்து பறயன்குளம், கடையான்குளம் வழியாக பனந்தோட்டத்திற்கு ஒரு சாலை செல்கிறது. இந்த சாலை வழியாக பள்ளி கல்லூரி வாகனங்கள் மற்றும் ஆட்டோ, கார், லாரி போன்ற தனியார் வாகனங்கள் சென்று வந்தனர்.

கொல்லங்கோடு பகுதியில் கடந்த ஓரிரு தினங்களாக பெய்த தொடர் மழையால் கடையான்குளம் கரையில் மண்சரிவு ஏற்பட்டு சாலை துண்டிக்கப்பட்டது. இதனால், இந்த வழியாக போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டது. இந்த சாலையை பயன்படுத்தி வந்த மக்கள் தற்போது பல கிலோமீட்டர் தூரம் சுற்றி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கொல்லங்கோடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் விடிய விடிய தொடர் மழை பெய்தது. நேற்று பகல் முழுவதும் கடற்கரை பகுதியில் அவ்வப்போது சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால், ஒருசில மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

### ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து தொடங்கியது விவசாயிகள் மகிழ்ச்சி



நாமக்கல் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலான மழை பெய்து வருவதால், வறண்டு கிடந்த ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து தொடங்கி உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

பரவலான மழை நாமக்கல் மாவட்டத்தில் கடந்த வாரம் தொடக்கத்தில் கோடையை மிஞ்சும் அளவுக்கு வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்தது. ஆனால் இந்த வாரம் தொடக்கம் முதலே பரவலான மழை பெய்து வருகிறது. இதனால் வறண்டு கிடந்த ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து தொடங்கி உள்ளது. எனவே விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். நேற்று முன்தினம் இரவும் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மழை பதிவாகி உள்ளது. அதிகபட்சமாக எருமப்பட்டி பகுதியில் 25 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பதிவான மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:- எருமப்பட்டி-25, பரமத்தி-20, நாமக்கல்-17, சேந்தமங்கலம்-7, திருச்செங்கோடு-7, குமாரபாளையம்-6,

ராசிபுரம்-4, புதுச்சத்திரம்-1. மாவட்டத்தின் மொத்த மழை அளவு 88 மி.மீட்டர் ஆகும்.

குளங்கள் நிரம்புகிறது

நாமக்கல் நகரின் மலைகோட்டை அடிவாரத்தில் ஜெட்டிக்குளம் மற்றும் திருப்பாக்குளம் என 2 குளங்கள் உள்ளன. இவை புதர்மண்டி கொசுக்களின் பிறப்பிடமாக காணப்பட்டது. தற்போது இந்த குளங்கள் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த பணி நடைபெற்று வரும் வேளையில் கடந்த சில நாட்களாக பெய்த மழைக்கு 2 குளங்களிலும் ஓரளவு தண்ணீர் தேங்கி உள்ளது. இதனை கோவிலுக்கு வரும் பக்தர்கள் மகிழ்ச்சியுடன் பார்த்து செல்வதை காண முடிகிறது.

திருச்செங்கோடு

திருச்செங்கோட்டில் கடந்த நில நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினமும் திருச்செங்கோடு பகுதியில் நல்ல மழை பெய்தது. இதன் காரணமாக புதிய பஸ் நிலையம் பகுதிகளில் பொதுமக்கள் இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களில் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

திருச்செங்கோடு - ஈரோடு ரோட்டில் மரக்கடை லைன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஸ்டேட் வங்கி அருகில் என பல பகுதிகளில் கடைகளின் முன்பு நிறுத்தப்பட்டு இருந்த இருசக்கர வாகனங்கள், கார் உள்ளிட்ட நான்குசக்கர வாகனங்களை மழைநீர் சிறிது தூரம் இழுத்து சென்றது. மேலும் முழங்கால் அளவுக்கு ரோட்டில் தண்ணீர் கரைபுரண்டு

சென்றதால் வாகனங்கள் நீந்தியபடி சென்றன. இதனால் வாகன ஓட்டிகள், பொதுமக்கள் மிகவும் அவதி அடைந்தனர்.

### கொட்டும் மழையிலும் குவிந்த சுற்றுலா பயணிகள்



நீலகிரியில் பெய்து வரும் தொடர் மழையையும் பொருட்படுத்தாமல் ஊட்டியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து உள்ளனர்.

பரவலாக மழைநீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவிற்கு மழை பெய்யவில்லை. ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் கோடை காலத்திற்கு இணையாக வெயில் அடித்தது. இதனால் இந்த ஆண்டு பருவமழை பொய்த்து விடுமோ? என்ற அச்சத்தில் விவசாயிகள் இருந்தனர்.இந்த நிலையில் கடந்த சில நாட்களாக நீலகிரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக சோலூர் தூபகண்டி, கோக்கால், கன்னேரிமுக்கு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 50 ஏக்கர் அளவில் பயிரிடப்பட்டு இருந்த

காய்கறிகள் மழைநீரில் அடித்து செல்லப்பட்டன.

காந்திஜெயந்தி விடுமுறைஊட்டியை பொறுத்தவரை கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வந்தது. பகலில் பெரிய அளவிற்கு மழை பெய்யவில்லை. இந்த நிலையில் நேற்று மதியம் திடீரென்று பலத்த மழை பெய்தது. இந்த மழை காரணமாக சாலைகளில் ஆறுபோல் மழைநீர் ஓடியது.

காந்தி ஜெயந்தி விடுமுறை மற்றும் காலாண்டு தேர்வு விடுமுறை என்பதால் ஊட்டிக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து உள்ளனர். ஊட்டியில் தற்போது பெய்து வரும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் தாவரவியல் பூங்காவை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர்.

சுற்றுலா பயணிகள் அவதிநேற்று மதியம் திடீரென்று பெய்த மழையால் பூங்காவை காண வந்த சுற்றுலா பயணிகள் பெரிதும் அவதி அடைந்தனர். தாங்கள் கொண்டு வந்திருந்த போர்வை, குடை உள்ளிட்டவைகளை தலைக்கு மேலே பிடித்தபடி பூங்காவில் வலம் வந்தனர். மேலும் மழையால் பெரியவர்கள் குளிர் தாங்க முடியாமல் நடுங்கினர். ஊட்டி படகு இல்லம், தொட்டபெட்டா, பைக்காரா உள்ளிட்ட பகுதிகளிலும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதியது. ஊட்டியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக நீர்நிலைகளுக்கு வரும் தண்ணீரின் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## பெரம்பலூரில் பெய்து வரும் மழையால் ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து தொடங்கியது



பெரம்பலூர்,

பெரம்பலூர் மாவட்டத்தில் பெய்துவரும் மழையால், ஏரி,குளங்களுக்கு நீர்வரத்து தொடங்கி உள்ளது.

பரவலாக மழை

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த மாதம் 27–ந்தேதி முதல் பரவலாக மழை பெய்துவருகிறது. வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக பெய்துவரும் இந்த மழையால் பெரம்பலூர் நகரின் நடுவே அமைந்துள்ள தெப்பக்குளம், வடக்குதெப்பகுளம், நகரைச்சுற்றி உப்புஓடை, கோனேரி ஆற்று ஓடை, குடிநீர் கிணறுகளிலும், மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள விவசாய பாசன கிணறுகளிலும் நிலத்தடி நீர்மட்டம் உயரத்தொடங்கி உள்ளது.

எளம்பலூர் ஏரி

27–ந்தேதி பெரம்பலூர் மாவட்டத்தில் பெய்த கனமழையால், பச்சமலையில் இருந்து உற்பத்தியாகி வரும் கோனேரி ஆற்று ஓடையில் மழைநீர் கரைபுரண்டு ஓடியது. கோனேரி ஆற்றில் இருந்து பெரம்பலூர் ஏரி, தெப்பக்குளத்திற்கு நீர்வரத்து தருவிக்கும் அதனையுடைய கிளை வாய்க்கால்கள் தூர் மண்டி போய் உள்ளதால் மழைநீரை முறையாக சேமிக்கமுடியாமல் போனது.

இந்த நிலையில் எளம்பலூர்பிரம்மரிஷிமலையில்இருந்து எளம்பலூர் ஏரிக்கு வரும் மழைநீர் வடிகால் வாய்க்கால் சமீபத்தில் தூர்வாரப்பட்டுள்ளதால், எளம்பலூர் ஏரியில் மழைநீர்தேங்கி உள்ளது. மேலும் குரும்பலூர் ஏரி, குளங்கள், செஞ்சேரியில் உள்ள ஏரி, குளம் ஆகியவற்றில் நீர் தேங்கி உள்ளது. செஞ்சேரி ஏரியில் இருந்து அரணாரை நீலியம்மன் ஏரி மற்றும் பெரம்பலூர் பெரியஏரிக்கு வரும் நீர்வரத்து வாய்க்காலை வடகிழக்கு பருவமழை தொடங்குமுன்னதாக தூர்வாரி சீரமைக்கவேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திற்கும், பொதுப்பணித்துறைக்கும் அரணாரையை சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தண்ணீர் வரத்து இல்லை

கடந்த ஒருமாதமாக பெரம்பலூர் மாவட்டத்தில் கோடையை மிஞ்சும் வகையில் நிலவு வந்த வெப்பநிலை மாறி தற்போது இதமான தட்பவெப்பநிலை நிலவிவருகிறது. சமீபத்தில் பரவலாக மழை பெய்துவந்தாலும், பெரம்பலூர் மாவட்டத்தின் எல்லையான பச்சைமலையில் மழை பெய்யாததால், அரும்பாவூர்ஏரி, தொண்டமாந்துறை ஏரி, வெங்கலம் ஏரி, லாடபுரம் ஏரி, மேலப்புலியூர் ஏரி மற்றும் பெரம்பலூர் ஏரி ஆகிய ஏரிகளில் தண்ணீர் வரத்து இதுவரை இல்லை. 3–வது வாரத்தில் தொடங்கும் வடகிழக்கு பருவமழையை பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கி உள்ளனர். 4 ஆண்டுகளாக பொய்த்துபோன பருவமழை இந்த ஆண்டாவது கைகொடுக்கும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

### சிவகங்கை மாவட்டத்தில் தொடர் மழை விவசாயிகள் மகிழ்ச்சி



சிவகங்கை மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக சரியான மழை பெய்யாமல் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. மாவட்டத்தில் 30 ஆயிரம் எக்டேரில் மழையை நம்பி விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்து உள்ளனர். ஆனால் சரியான மழை இல்லாததால் பயிர்கள் கருகி விடும் அபாயம் ஏற்பட்டது. இந்தநிலையில் கடந்த 2 தினங்களாக மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்தது. இதனால் மழையை நம்பி நடப்பட்டிருந்த பயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பதிவான மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:-

சிவகங்கை 23, காரைக்குடி 15, மானாமதுரை 35, இளையான்குடி 48, தேவகோட்டை 9.2, திருப்பத்தூர் 3.2, திருப்புவனம் 18.2 ஆக பதிவாகி இருந்தது.

இந்த மழையால் மாவட்டத்தில் வறண்டு கிடந்த கண்மாய், ஏரி, குளங்களில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மேலாண்மைத்துறை மாணவர்கள் சுற்றுலாத்துறை சார்ந்த தொழில்கள் தொடங்கி வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் துணைவேந்தர் பேச்சு

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் மேலாண்மைத்துறை மாணவர்கள் சுற்றுலாத்துறை சார்ந்த தொழில்கள் தொடங்கி வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்று துணை வேந்தர் பேசினார்.

சுற்றுலா தினம்காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் உலக சுற்றுலா தின விழா கொண்டாடப்பட்டது. பேராசிரியர் ராஜ்மோகன் அனைவரையும் வரவேற்றார். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சுப்பையா தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசியதாவது:- சுற்றுலாத்துறையின் முன்னோடி நாடுகளான பிரான்சு, சீனா, சிங்கப்பூர், மலேசியாவை போல் நமது நாட்டிலும் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும். நம் நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அடிப்படையில் ஆசிய-பசுபிக் பகுதியில் இந்தியா 11-வது இடத்திலும், உலக அளவில் 42-வது இடத்திலும் உள்ளது. இதனை மாற்றி சுற்றுலாத்துறையில் முதல் 10-இடங்களுக்குள் நமது நாட்டினை கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும்.

மேலாண்மைத்துறை மாணவர்கள் சிங்கப்பூர், மலேசியா மற்றும் வளர்ந்த சுற்றுலாத்துறை முன்னோடி நாடுகளுக்கு சென்று அங்கு உள்ள சுற்றுலாத்துறை சார்ந்த செயல்பாடுகளை ஆராய்ந்து அதன் அடிப்படையில் இந்தியாவின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த திட்டங்கள் தீட்ட வேண்டும். மேலாண்மைத்துறை சார்ந்த மாணவர்கள் சுற்றுலாத்துறை சார்ந்த தொழில்களை தொடங்கி அதன் மூலம் எண்ணற்ற வேலை வாய்ப்புகளை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்சிறப்புரை

விழாவில் சிவகங்கை மாவட்ட சுற்றுலா அதிகாரி ஜெயக்குமார், மதுரை கதம்பவனத்தின் மேலாண்மை இயக்குனர் சித்ரா, காரைக்குடி வள்ளுவர்

பேரவை நிறுவனர் ஜெயங்கொண்டான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் அழகப்பா மேலாண்மையியல் நிறுவன இயக்குனர் பேராசிரியர் கலியமூர்த்தி, மேலாண்மையியல் துறை பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், மேலாண்மைத் துறை மாணவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் பேராசிரியர் சிவக்குமார் நன்றி கூறினார்.

## கொடியிலேயே அழுகத்தொடங்கிய திராட்சை பழங்கள் விவசாயிகள் வேதனை



கம்பம் பகுதிகளில் தொடர் மழை காரணமாக திராட்சை பழங்கள் கொடியிலேயே அழுகத்தொடங்கியதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

பன்னீர் திராட்சைதேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை ஆகியவை அதிக அளவில் விவசாயம் செய்யப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக திராட்சை தோட்டங்கள் உள்ளன. கூடலூர், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, அணைப்பட்டி, ராயப்பன்பட்டி, ஆனைமலையான்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பன்னீர் திராட்சை பயிரிடப்பட்டு வருகிறது. அத்துடன் சின்னமனூர் அருகே உள்ள ஓடைப்பட்டி, தென்பழனி உள்ளிட்ட பகுதியில் விதையில்லா திராட்சை தோட்டங்கள் உள்ளன. கம்பம் பள்ளத்தாக்கு

பகுதியில் இருந்து ஆண்டு முழுவதும் பன்னீர் திராட்சை கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பகுதியில் இருந்து தமிழகத்தின் பிற நகரங்களுக்கும், கேரள மாநிலத்திற்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்தநிலையில் கடந்த சில நாட்களாக கம்பம் பள்ளத்தாக்கு பகுதி உள்பட தேனி மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் திராட்சை கொத்துகளில் உள்ள இடுக்கு பகுதிகளில் மழை நீர் தேங்கிய நிலையில், பழங்கள் கொடியிலேயே அழுகத்தொடங்கி விட்டன.

நஷ்டம்

பழுத்த திராட்சை பழங் களை உடனடியாக பறிக்காவிட்டால், அவை அனைத்தும் வெடித்து உதிர்ந்து விடும். இதற்கிடையே மழை காரணமாக பூ மற்றும் பிஞ்சுகள் உள்ள திராட்சை கொடிகளில் செவட்டை நோய் தாக்கியுள்ளதால் அவை உதிர்ந்து வருகின்றன. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறும் போது, "தற்போது மழை தொடர்ந்து பெய்து வருவதால் பறித்த திராட்சை பழங்களை விற்பனைக்கு கொண்டு செல்ல முடியவில்லை. அத்துடன் பழங்கள் கொடியிலேயே அழுகிபோகிறது. இதனால் எங்களுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே பாதிப்புகள் குறித்து அதிகாரிகள் மூலம் விசாரணை நடத்தி இழப்பீடு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

## விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டும் மன்னார்குடி ஒன்றியக்குழு கூட்டத்தில் உறுப்பினர் கோரிக்கை

குறுகியகால நெல்விதைகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என்று மன்னார்குடி ஒன்றியக்குழு கூட்டத்தில் உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்.ஒன்றியக்குழு கூட்டம்மன்னார்குடியில் ஒன்றியக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றியக்குழு

தலைவர் உதயகுமாரிதமிழ்க்கண்ணன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் தமிழ்செல்வம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆறுமுகம், வெங்கடாஜலபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் உறுப்பினர்கள் கலந்துகொண்டு பேசினர். இதன் விவரம் பின்வருமாறு:-

ராகவன் (இந்திய கம்யூனிஸ்டு): விவசாயிகள் பல நெருக்கடிகளை சந்தித்து வருகிறார்கள். விவசாயத்தில் நஷ்டம் ஏற்படுவதால் விளை நிலங்கள் எல்லாம் வீட்டுமனைகளாக மாறி வருகிறது. விவசாய கடன்கள் விரைந்து கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். குறுகியகால நெல் விதைகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டும்.

சபாரவிச்சந்திரன் (அ.தி.மு.க.): பரவாக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் சைக்கிள் நிறுத்தும் இடம் கட்டி தர வேண்டும்.

காந்தி (அ.தி.மு.க.): உள்ளிக்கோட்டை அரசு மருத்துவமனை செல்லும் சாலையை செப்பனிட வேண்டும்.

தமிழ்செல்வன் (இந்திய கம்யூனிஸ்டு): நெம்மேலி சாலை மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் சேரன்குளம் சுற்றி செல்லவேண்டிய நிலை உள்ளது. ஆகவே நெம்மேலி சாலையை சீரமைத்து தர வேண்டும்.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்

அசோகன் (அ.தி.மு.க.): விவசாயிகள் பல இன்னல்களை சந்தித்து நெல் அறுவடை செய்து கொண்டு வரும் நெல்லுக்கு நேரடி நெல் கொள்முதல்

நிலையங்களில் ஈரப்பதம் பார்க்காமல் கொள்முதல் செய்ய தகுந்த நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு உதவ வேண்டும்.

தமிழ்செல்வம் (துணைத்தலைவர்):-உறுப்பினர்களின் கோரிக்கைகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

உதயகுமாரிதமிழ்க்கண்ணன் (தலைவர்): மன்னார்குடி ராஜகோபாலசாமி கோவில் திருமண மண்டப கட்டிட பணிக்கு ரூ.70 லட்சம் நிதியும், ஒத்தைதெரு ஆனந்த விநாயகர் கோவில் அன்னதான கூடம் கட்ட ரூ.60 லட்சம் நிதியும், திருராமேஸ்வரம் கோவில் குளத்தை சீரமைக்க ரூ.10 லட்சம் நிதியும் வழங்கி ஆணையிட்ட முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு மன்றம் சார்பில் பாராட்டும், இதற்கு பரிந்துரை செய்த உணவுத்துறை அமைச்சர் ஆர்.காமராஜுக்கும் நன்றியும் தெரிவித்து கொள்கிறேன். மேலும் உறுப்பினர்கள் கோரிக்கைகள் நிதி ஆதாரங்களுக்கு தகுந்தாற்போல் நிறைவேற்றப்படும்.இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

தினகரன்

**பருவநிலை செயல் திட்டத்தில் அறிவிப்பு : இந்தியாவில் கார்பன் புகை வெளியேற்றம் 35% குறைக்கப்படும்**




வாஷிங்டன்: பருவநிலை மாற்றங்கள் குறித்த ஐ.நா கட்டமைப்பு அமைப்பு சார்பில் ஜெர்மனியின் பான் நகரில் உலக பருவநிலை மாற்றங்கள் பற்றிய மாநாடு ஏற்கனவே நடந்து முடிந்தது. பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் நகரில் இந்தாண்டு இறுதியில் அடுத்த மாநாடு நடைபெற உள்ளது. அதில் உலக பருவநிலை மாற்றங்கள் குறித்த ஒப்பந்தம் தயாராக உள்ளது. அதன் பங்களிப்பாக, இந்தியா தரப்பில் ''தேசிய உறுதி பங்களிப்பு'' நடவடிக்கையாக ''பருவநிலை செயல் திட்ட'' அறிக்கை ஐ.நா அமைப்பிடம் நேற்று அளிக்கப்பட்டது. அறிக்கையில் கூறப்பட்ட விவரம்: பருவநிலை மாற்றங்களில் நியாயமான மற்றும் லட்சியம் அடங்கிய கொள்கை இந்தியாவில் பின்பற்றப்படும். அவசியம் எழுந்தால், அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகளில் மாற்றங்கள் செய்து அறிக்கை வெளியிடுவோம். அரசு தரப்பில் எடுக்கப்பட உள்ள பல கட்ட நடவடிக்கைகள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டு இருக்கிறது.

கார்பன் புகை வெளியேற்றம் 30-35 சதவீதம் வரும் 2030ம் ஆண்டுக்குள் குறைக்கப்படும். பசுமை பருவகால நிதி ஆணையத்திடம் இருந்து குறைந்த வட்டிக்கு சர்வதேச நிதி உதவி பெற்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை 40 சதவீத அளவு பயன்படுத்தும் நவீன தொழில்நுட்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒட்டு மொத்த உலக சமுதாயத்தினரின் சமமான பங்களிப்பு அடங்கிய பருவநிலை மாற்றம் ஒப்பந்தம் பாரீஸ் மாநாட்டில் உருவாக வேண்டும். நிதி, தொழில்நுட்பம், திறன் வளர்க்கும்

தகுதிகள் கிடைத்தால் வளரும் நாடுகள் மாற்று எரிசக்தித் துறையில் மிகச் சிறப்பாக செயல்பட முடியும். தற்போது தயாரித்துள்ள தொடக்க மதிப்பீட்டின்படி, விவசாயம், வனத்துறை, மீன்வள உள்கட்டமைப்பு, நீராதாரம், சுற்றுச்சூழல் போன்ற துறைகளில் பசுமை மாற்றங்கள் கொண்டுவர பதிமூன்று லட்சம் கோடி ரூபாய்கள் தேவைப்படுகிறது. கார்பன் புகை வெளியேற்றத்தை குறைக்க, மட்டுப்படுத்தப்படும் நடவடிக்கையாக, நிதி ஆயோக் கமிட்டி 54 லட்சம் கோடி ரூபாய் பரிந்துரை செய்துள்ளது.

**ஒரே வாரத்தில் ராக்கெட் வேகம் : துவரம் பருப்பு மேலும் மேலும் உயர்வு**



சென்னை: தமிழகத்தில் அரிசி, மிளகாய் தவிர மற்ற மளிகை பொருட்களுக்கு வடமாநிலங்களை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. தமிழகத்திற்கு மத்தியபிரதேசம், உத்திரபிரதேசம், குஜராத், கர்நாடகா, ஆந்திரா, மகராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருந்து துவரம் பருப்பு விற்பனைக்கு வருகிறது.

இங்கு இந்த ஆண்டு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் ஆன்லைன் வர்த்தகத்தால் பருப்பு விலை தள்ளாடுகிறது. இது போன்ற காரணங்களால் துவரம் பருப்பு ராக்கெட் வேகத்தில் உயர்ந்துள்ளது. அதாவது, கடந்த வாரம் 100 கிலோ கொண்ட மூடை ரூ.14,200க்கு விற்றது தற்போது 15,500 ஆகவும், கிலோ ரூ.150லிருந்து ரூ.170 ஆகவும் உயர்ந்துள்ளது. கென்யா, தான்சானியா போன்ற ஆப்ரிக்க நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் தான்சானியா துவரம் பருப்பு மூடை ரூ.10,000லிருந்து ரூ.13,000, கிலோ ரூ.110லிருந்து ரூ.140 ஆகவும் வி◌ைல உயர்ந்துள்ளது.
குஜராத், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் இருந்து உளுந்தம் பருப்பு வருகிறது.

இங்கு விளைச்சல் குறைவு, கொண்டுவரப்படும் பருப்புகளில் 50 சதவீதம் அளவுக்கு சேதாரம், தேவை அதிகரிப்பு, வரத்து குறைவு போன்ற காரணங்களால் உளுந்தம் பருப்பு மூடை ரூ.13,200லிருந்து ரூ.15,200, கிலோ ரூ.140லிருந்து ரூ.160, பர்மா உளுந்தம்பருப்பு ரூ.130, ரூ.150 ஆக விலை உயர்ந்துள்ளது. கர்நாடகா, ஆந்திரா, மகராஷ்டிரா மற்றும் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பாசிப்பருப்பு வருகிறது. இங்கு விளைச்சல் பாதிப்பால் பாசிப்பருப்பு ரூ.110லிருந்து ரூ.125, பாசிப்பருப்பு(2ம் ரகம்) ரூ.95லிருந்து ரூ.115, கடலைப்பருப்பு 50 கிலோ மூடை ரூ.3000லிருந்து ரூ.3200, கடலைப்பருப்பு(2ம் ரகம்) ரூ.2,900லிருந்து ரூ.3100 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. அதே போல, பாமாயில் 1லிட்டர் ரூ.48லிருந்து ரூ.53, சன்பிளவர் ரூ.70லிருந்து ரூ.88, சன்பிளவர் அடுத்த ரகம் ரூ.78லிருந்து ரூ.83 ஆகவும் விலை உயர்ந்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறியுள்ளார்.

இது குறித்து சொரூபன் மேலும் கூறியதாவது: கடந்த கால காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு பருப்பு விலை ரூ.100க்கு விற்கும் போது ஆன்லைன் வர்த்தகத்துக்கு தடை விதித்தது. தற்போது விலை கடுமையாக உயர்ந்த போதும் ஆன்லைன் வர்த்தகத்துக்கு மத்திய அரசு தடை விதிக்கவில்லை. இதனால், வடமாநிலங்களில் விளையக்கூடிய பருப்பு வகைகளை மொத்தமாக வாங்கி ஆன்லைன் வர்த்தகத்தில் கோடி கணக்கில் சம்பாதிக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. உள்நாட்டு பொருட்களுக்கு ஊக்குவிக்கும் வகையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் சமையல் எண்ணெய் பொருட்களுக்கு மத்திய அரசு 5 சதவீதம் இறக்குமதி வரி விதித்துள்ளது. இதனால், சமையல் எண்ணெய் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. இன்னும் பருப்பு உள்ளிட்ட மளிகை பொருட்கள் மற்றும் சமையல் எண்ெணய் விலை உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

இட்லி, வடை விலை உயர்வு

பருப்பு விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதால் ஓட்டல்களில் இட்லி, தோசை மற்றும் சாப்பாட்டுக்கு கிண்ணத்தில் வைத்த சாம்பார், தற்போது சிறிய கரண்டியில் ஊற்றும் நிலைக்கு வந்துள்ளது. அது மட்டுமல்லாமல் சிறிய கடைகளில் இட்லி ரூ.5லிருந்து ரூ.8 ஆகவும், வடை ரூ.4லிருந்து ரூ.6 ஆகவும் விலையை உயர்த்தியுள்ளனர். பருப்பு உள்ளிட்ட சமையல் பொருட்களின் விலை உயர்ந்து வருவது நடுத்தர மக்களை நிலை குலைய வைத்துள்ளது.

**3வது நாளாக ஸ்டிரைக் நீடிப்பு : 30 ஆயிரம் கோடி சரக்குகள் தேக்கம் விலைவாசி கடுமையாக உயரும்**




சேலம்: சுங்கச்சாவடிகளை அகற்றக்கோரி லாரி உரிமையாளர்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் இன்று 3வது நாளாக நீடிக்கிறது. இதனால் ரூ.30 ஆயிரம் கோடி மதிப்பிலான பொருட்கள் தேக்கம் அடைந்துள்ளது. 4ம் தேதி முதல் தர்ணா, சுங்கச்சாவடிகள் முற்றுகை உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட லாரி உரிமையாளர்கள் முடிவு செய்துள்ளனர். இதன்காரணமாக விலைவாசி கடுமையாக உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள சுங்கச்சாவடிகளை அகற்ற வேண்டும். சுங்கக் கட்டணத்தை ஆண்டுக்கு ஒருமுறை செலுத்தும் வசதி ஏற்படுத்த வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு முழுவதும் லாரி ஸ்டிரைக் நேற்று முன்தினம் தொடங்கியது. 92 லட்சம் வாகனங்கள் ஓடவில்லை. தமிழகத்தில் மட்டும் 7 லட்சம் லாரிகள் நிறுத்தப்பட்டன. 3வது நாளாக லாரி ஸ்டிரைக் இன்றும் நீடிக்கிறது. சரக்கு போக்குவரத்து முற்றிலும் முடங்கிப்போய் உள்ளது.

தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்களுக்கு லாரிகள் லோடு ஏற்றி செல்லவில்லை. அதேபோல வெளிமாநிலங்களில் இருந்தும் தமிழகத்துக்கும் லாரிகளில் சரக்கு வரவில்லை. ரூ.30 ஆயிரம் கோடி மதிப்பிலான சரக்குகள் தேக்கமடைந்திருக்கும் என மதிப்பீடு

செய்யப்பட்டுள்ளது. மாநில லாரி உரிமையாளர்கள் சம்மேளன தலைவர் நல்லதம்பி கூறுகையில், ''மத்திய அரசு லாரி உரிமையாளர்களின் கோரிக்கையை ஏற்க முன்வரவில்லை. இதனால் ஸ்டிரைக் தொடர்ந்து நீடிக்கிறது,'' என்றார். சேலம் மாவட்ட லாரி உரிமையாளர் சங்க தலைவரும், மாநில சம்மேளனத்தின் பொருளாளருமான சென்னக்கேசவன் கூறுகையில், '' கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் நீடிக்கும். அடுத்தகட்டமாக சுங்கச்சாவடிகள் முன் தர்ணா மற்றும் முற்றுகை போராட்டங்கள் நடத்த முடிவு செய்துள்ளோம்.'' என்றார். இதன் காரணமாக விலைவாசி உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**தென்மேற்கு பருவமழை 26% குறைவு**




திருவனந்தபுரம்: கேரளாவில் தென்மேற்கு பருவமழை வழக்கமாக ஜூன் மாதத்தில் தொடங்கி செப்டம்பர் வரை 4 மாதங்கள் பெய்யும். இந்த மாதங்களில் சராசரியாக 203 செ.மீ. வரை மழை பெய்யும். ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை அதிக அளவிலும், செப்டம்பரில் சற்று குறைவாகவும் பருவமழை இருக்கும். ஆனால் இவ்வருடம் பருவமழை கேரளாவில் எதிர்பார்த்ததை விட குறைவாகவே பெய்துள்ளது.

கடந்த ஜூன் முதல் செப்டம்பர் வரை 4 மாதங்களில் 151 செ.மீ. மழையே பெய்துள்ளது. இது வழக்கமாக பெய்யும் மழையை விட 26% குறைவாகும். ஆலப்புழா, காசர்கோடு மற்றும் பத்தனம்திட்டா ஆகிய மாவட்டங்களில் 30 சதவீதத்திற்கும் மேல் மழை குறைந்துள்ளது.தென்மேற்கு பருவமழை பொய்த்ததால் கேரளாவில் குடிநீர் தட்டுப்பாடும் மின் பற்றாக்குறையும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**சென்னை உள்ளிட்ட பல இடங்களில் இடி, மின்னலுடன் கனமழை : குமரியில் 25 வீடுகள் இடிந்து விழுந்தது**

சென்னை: குமரியில் இடி, மினனலுடன் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 25 வீடுகள் இடிந்து விழுந்தன. சென்னையில் நேற்று இரவு திடீரென இடி, மின்னலுடன் நல்ல மழை பெய்தது. காற்றும் பலமாக வீசியதால் மயிலாப்பூரில் மரம் ஒன்று முறிந்து நின்றிருந்த கார் மீது விழுந்தது. இதில் கார் சேதமடைந்தது. திருவொற்றியூர், மணலி, எண்ணூர், மாதவரம், வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை ஆகிய பகுதிகளிலும் பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சென்னையில் பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 15 தினங்களுக்கும் மேலாக மழை பெய்து வருகிறது. நேற்றும் தொடர்ந்த மழை இடி, மின்னலுடன் கொட்டி தீர்த்தது. கீரிப்பாறை உள்பட பல பகுதிகளில் 25 வீடுகள் இடிந்து விழுந்தன. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் பல இடங்களில் அரிப்பு ஏற்பட்டுள்ளது. பல வீடுகளை வெள்ளம் சூழந்துள்ளது.

மழை காரணமாக பேச்சிப்பாறை, பெருஞ்சானி, சிற்றாறு 1, சிற்றாறு 2, ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் நாகர்கோவில் நகருக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணை நிரம்பியுள்ளது. கடல் பகுதியில் சீற்றம் அதிகமாக இருப்பதால்

எச்சரிக்கையுடன் கடலில் மீன்பிடிக்க வேண்டும் என்று மீனவர்களுக்கு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

1திருப்பதியில் நேற்று மாலை முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் சாமி தரிசனம் செய்ய முடியாமல் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் கடும் அவதிக்குள்ளாகினர். 31 அறைகளும் நிரம்பி வழிவதால் அறைகள் கிடைக்காமல் கடும் குளிர் மற்றும் மழையிலும் பக்தர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தினமணி

**தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தொடரும் வாய்ப்பு**




சென்னை, அரபிக் கடலில் உள்ள காற்று மேல் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் மழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.தென்மேற்கு பருவமழை தமிழகத்தில்

தீவிரமடைந்துள்ளது. எனவே கடந்த சில தினங்களாக மாநிலத்தின் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. குறிப்பாக தென் மாவட்டங்களில் கன மழை பெய்திருந்தது.புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர், ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் 8 செ.மீ, கோவை மாவட் டம் சின்னகலாரில் 6 செ.மீ, நீலகிரி மாவட்டம் குன்னூர், தேனி மாவட்டம் கூடலூர், அரண்மனைபுதூர், திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு, கிருஷ்ணகிரி மாவட் டம் ஓசூர், திருநெல்வேலி மாவட்டம் சிவகிரி, ஆய்க்குடி உள்ளிட்ட இடங்களில் 4 செ.மீ, தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை, விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் உள்ளிட்ட இடங்களில் 3 செ.மீ மழை நேற்று முன் தினம் பதிவாகியுள்ளது.தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்துக்கு கன மழை நீடிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அதன் பிறகு மழை படிப்படியாக குறையும அதிக மழை காரணமாக மாநிலத்தில் வெயில் சற்று தணிந்துள்ளது. மாநிலத்தில் ஒரு சில இடங்களில் சராசரி அதிகபட்ச வெயிலை விட குறைவான வெயில் பதிவாகியிருந்தது. தமிழ்நாட்டில் நேற்று சென்னையில் 33.7 டிகிரி வெயில் பதிவானது. அதற்கு அடுத்து சேலத்தில் 32.9 டிகிரி, நாகப்பட்டினம் 32.1 டிகிரி, காரைக்கால் 32 டிகிரி, கடலூரில் 31.8 டிகிரி, கரூரில் 31.4 டிகிரி பதிவாகியது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## 2-வது நாளாக லாரிகள் வேலை நிறுத்தம்: ரூ.30 ஆயிரம் கோடி சரக்குகள் தேக்கம் - அத்தியாவசிய பொருட்கள் விலை உயரும் அபாயம்




சுங்கச்சாவடிகளை அகற்றவேண் டும், சுங்கக் கட்டணத்தை ஆண்டுக்கு ஒருமுறை செலுத்தும் வசதி ஏற்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு முழுவதும் லாரிகள் வேலைநிறுத்தம் கடந்த 1-ம் தேதி தொடங்கியது._

இதன் பாதிப்பு தமிழகத்திலும் எதிரொலிக்க தொடங்கியது. நேற்று 2-வது நாளாக வேலைநிறுத்தம் நீடித்ததால் பொருட்கள் வரத்து குறையத் தொடங்கியது. தமிழகத்தில் சுமார் 7 லட்சம் சரக்கு வாகனங்கள் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றுள்ளன. இதனால் சரக்கு போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் ரூ.30 ஆயிரம் கோடி மதிப்பிலான சரக்குகள் தேக்கம் அடைந்துள்ளன._

**சேலம்**

சேலம் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களில், ரூ.2000 கோடி மதிப்புள்ள பொருட்கள் தேக்கமடைந்துள்ளன. வெளி மாநிலங்களில் இருந்து தினமும் 250 லாரிகளில் வரும் பருப்பு வகைகள், பூண்டு, வெங்காயம், கோதுமை போன்ற உணவுப் பொருள்கள் கடந்த 2 நாட்களாக வரவில்லை. அதனால் அத்தியாவசிய பொருட்கள் விலை உயரும் அபாயம் உள்ளது என்கிறார் சேலம் மாவட்ட லாரிகள் உரிமையாளர்கள் சங்க தலைவர் சென்ன கேசவன். லாரி டிரைவர்கள், கிளீனர்கள், சுமை

தூக்கும் தொழிலாளர்கள் மற்றும் இந்த தொழிலை நம்பி உள்ள சுமார் 2 லட்சம் பேர் சேலம் மாவட்டத்தில் வேலையிழந்துள்ளனர்.

ஈரோடு, நாமக்கல் மாவட்டங் களில் சரக்கு லாரி போக்குவரத்து முற்றிலுமாக ஸ்தம்பித்துள்ளது. வெளிமாநில லாரிகள் வருகை முற்றிலுமாக தடைபட்டுவிட்டது.

ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள், ஜவுளி, அரிசி, எண்ணெய், கட்டுமான பொருட்கள் போன்ற அனைத்தும் கிடங்குகளிலேயே தேங்கி கிடக்கின்றன.

போராட்டம் குறித்து தமிழ்நாடு லாரி உரிமையாளர்கள் சம்மேளன தலைவர் கே.நல்லதம்பி கூறும் போது, 'லாரி உரிமையாளர்களின் போராட்டம் தமிழக அரசுக்கு எதி ரானது அல்ல. எங்களது கோரிக்கை முற்றிலும் மத்திய அரசு தொடர் பானது. தமிழகம் முழுவதும் 7 லட்சம் லாரிகள், சரக்கு வாகனங்கள் உள்ளன. இவை அனைத் தும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு விட்டன. வேலைநிறுத்தப் போராட் டத்தால் தமிழகத்தில் லாரி உரிமை யாளர்களுக்கு ரூ.20 கோடி, மாநில அரசுக்கு ரூ.400 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது' என்றார்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கோழிப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளை இருப்பு வைத்தால் பெரும் நஷ் டம் ஏற்படும் என்பதால், சொந்த மாக லாரி வைத்துள்ள பண்ணையாளர்கள் கேரளம், கர்நாடகம் மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு நேற்று அதிகாலை முதல் முட்டைகளை அனுப்பினர்.

கிருஷ்ணகிரியில் 75 சதவீதம் லாரிகள் இயங்கவில்லை. தருமபுரி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களில் ரூ.8 கோடி மதிப்பிலான வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதாக லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**கோவை_**

கோவையைப் பொறுத்தவரை 25 ஆயிரம் லாரிகள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றுள்ளன. இங்கிருந்து வெளிமாநிலங்கள், பிற மாவட்டங்களுக்கு

செல்ல வேண்டிய காய்கறிகள், பழங்கள், பூக்கள், உணவுப் பொருட்கள், ஜவுளி உற்பத்திப் பொருட்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், மோட்டார் பம்ப் பொருட்கள் ஆகியவை தேங்கியுள்ளன. இரு நாட்களில் வர்த்தக பாதிப்பு ரூ. 500 கோடியை எட்டும் என கோயம்புத்தூர் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.எஸ்.கலியபெருமாள் தெரிவித்தார்.

**திருப்பூர்_**

திருப்பூர் மாவட்டத்தில் ரூ.250 கோடி வர்த்தகம் பாதிக்கப் பட்டுள்ளது. 1,500 லாரிகள் ஓடவில்லை.

கறிக்கோழி, தேங்காய், நூல் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தேக்கமடைந்துள்ளதால், ரூ.250 கோடி வர்த்தகம் பாதிக்கப்பட் டுள்ளதாக தொழில்துறையினர் தெரிவிக்கின்றனர்.

**திருநெல்வேலி**

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் 2-வது நாளாக நேற்று வெளிமாவட்டங்களில் இருந்து காய்கறிகள், முட்டை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வரத்து பாதிக்கப்பட்டது. தூத்துக்குடி துறைமுகத்துக்கும், அங்குள்ள குடோன்களுக்கும் இடையேயான லாரி போக்குவரத்து வழக்கம்போல் நடைபெற்றது.

**திருச்சி**

திருச்சி மாவட்டத்தில் சுமார் 15 ஆயிரம் லாரிகள் இரண்டாவது நாளாக நேற்றும் ஓடவில்லை. இதனால் பல கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் தேங்கின. கரூர் மாவட்டத்தில் 2,000 லாரிகள் மற்றும் 600 மினி லாரிகள் ஓடாததால் ரூ.15 கோடி மதிப்பிலான பொருட்கள் தேங்கின. தஞ்சை, திருவாரூர், நாகை, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை மாவட்டங்களிலும் பெரும்பாலான லாரிகள் ஓடவில்லை.

**மதுரை_**

மதுரைக்கு காய்கறிகள், பழங்கள் சந்தைகளுக்கு வரவில்லை. சிறு, குறு தொழிற் சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்களும் வராததால் மதுரை மாவட்டத்தில் ஒட்டுமொத்த வர்த்தகமும் பாதிக்கப்பட்டுள்ளதாக லாரி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

தேனி மாவட்டத்தில் இருந்து கேரளத்துக்கு தினமும் அனுப்பப்படும் அரிசி, பருப்பு, காய்கறிகள், இறைச்சி, பால் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் 20 டன் தேக்கம் அடைந்துள்ளன. 2 நாளாக நீடித்த வேலைநிறுத்தம் காரணமாக ரூ.2 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

**விருதுநகர்**

விருதுநகர் மாவட்டத்துக்கு பருப்பு வகைகள் கொண்டு வருவதும், அரவை முடிக்கப்பட்ட பருப்பு வகைகள், மளிகைப் பொருட்கள் வெளி மாவட்டங்களுக்கு அனுப்புவதும் பாதிக்கப்பட்டுள்ளது. சிவகாசியில் இருந்து பட்டாசுகளை கொண்டு செல்வது பாதிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் பி.எல்லப்பன் கூறும்போது, திண் டுக்கல் மாவட்டத்தில் மட்டும் ரூ.10 கோடி வரை வர்த்தகம் பாதிக் கப்பட்டுள்ளது. காய்கறிகள், தேங் காய்கள், சணல் பொருட்கள் அனுப்புவது நிறுத்திவைக்கப்பட் டுள்ளது என்றார்.

## கிராமத்து விஞ்ஞானி: மோகனூர் விவசாயியின் டிராக்டர் செக்கு




படம்: பார்த்திபன்

எண்ணெய் ஆட்டுவதற்கு மோகனூர் விவசாயி பயன்படுத்தும் புதிய முறை, விவசாயிகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

அந்தக் காலத்தில் கிராமப்புறங்களில் மாடு பூட்டி செக்கிழுத்து எண்ணெய் எடுக்கும் பணி நடைபெற்றுவந்தது. எண்ணெய் எடுப்பதற்கு இந்த முறைதான் பரவலாகப் பின்பற்றப்பட்டுவந்தது. எண்ணெய் வியாபாரிகள் கடைகளில் மட்டுமல்லாமல், வீடுகளுக்கும் கொண்டுவந்து எண்ணெய் விற்றுவந்தார்கள். இன்றைக்கு செக்குகள் குறைந்துவிட்டன. எண்ணெய் எடுக்கும் தொழில் பல்வேறு நவீன மாற்றங்களைக் கண்டுள்ளது. மாடுகளும் குறைந்துவிட்டதால், மாடு கட்டி எண்ணெய் எடுக்கும் தொழில் கிட்டத்தட்ட மறைந்தேவிட்டது.

இந்த நிலையில், நாமக்கல் மாவட்டம் மோகனூர் அருகேயுள்ள ராசிபாளையத்தைச் சேர்ந்த இளம் விவசாயி எம். வடிவேல், செக்கில் எண்ணெய் எடுக்கும் தொழிலை வெற்றிகரமாக நடத்திவருகிறார். அவர் செய்துள்ள ஒரே மாற்றம், செக்கில் மாடுகளுக்கு பதிலாக சின்ன டிராக்டரை பூட்டியுள்ளதுதான். முற்றிலும் புதிய இந்த உத்தி, அப்பகுதியைக் கடந்து செல்லும் எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

**பரம்பரைத் தொழில்**

இது குறித்து விவசாயி எம். வடிவேல் பகிர்ந்துகொண்டது:

“விவசாயம்தான் எங்களோட முதன்மைத் தொழில். எனது தாத்தா காலம் முதல் எண்ணெய் ஆட்டும் தொழிலில் ஈடுபட்டுவருகிறோம். தாத்தாவுக்கு பின்னால் அப்பா முத்துசாமியும் இத்தொழிலைத் தொடர்ந்தார். அப்பா காலத்தில் பெரிய ஆலைகளில் இயந்திரங்களை பயன்படுத்தி எண்ணெய் தயாரிக்கும் தொழில்நுட்பம் வளர்ந்தது. அதனால் செக்கில் எண்ணெய் ஆட்டும் தொழில் முடங்கும் சூழ்நிலை உருவானது.

அதனால் சில ஆண்டுகளாக எண்ணெய் தயாரிக்கும் தொழிலை நிறுத்தி வைத்திருந்தோம். மீண்டும் எண்ணெய் ஆட்டும் தொழிலில் ஈடுபடலாம் என, அப்பா ஆலோசனை கூறினார். அப்போது முன்னைக் காட்டிலும்

நவீன உத்தியைப் பயன்படுத்தி, எண்ணெய் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

**புதிய உத்தி**

நிலத்தை உழுவதற்கு பயன்படுத்தப்படும் சின்ன டிராக்டர் எங்களிடம் இருந்தது. மாடுகளுக்கு பதிலாக அந்த டிராக்டரை பயன்படுத்தலாம் என முடிவு செய்தோம். எனினும், வெறும் மண் தரையில் இயக்கினால் டயர் தேய்மானம் அதிகமாக இருந்தது. அதைக் குறைப்பதற்காக சிமெண்ட் தளம் அமைத்தோம். அதற்கு ரூ. 1 லட்சம்வரை செலவு ஆனது.

பிறகு எண்ணெய் செக்கின் சங்கிலியை, டிராக்டருடன் இணைத்து செக்கை இயக்கினோம். இந்த முறையில் டிராக்டரை இயக்க ஆள் தேவையில்லை. டிராக்டர் ஸ்டியரிங்கை ‘லாக்’ செய்தால் போதும். டிராக்டர் தானாக சுற்றிக்கொண்டே இருக்கும். நாளொன்றுக்கு 16 லிட்டர் எண்ணெய் எடுக்கிறோம். வெளியிலிருந்து எண்ணெய் ஆட்ட வருபவர்களுக்கு, ஒரு லிட்டர் எண்ணெய் ஆட்டு வதற்குக் கட்டணமாக ரூ. 14 வாங்குகிறோம். ஆலைகளில் இதைவிடவும் குறைவாகக் கட்டணம் வாங்குகின்றனர். எனினும், சுத்தமாகவும் எவ்விதக் கலப்படமும் இன்றியும் எண்ணெய் தயாரிக்கப்படுவதால், எங்கள் கட்டணத்தை யாரும் பெரிதாக நினைப்பதில்லை.

மூலப்பொருட்களின் விலை உயர்வுக்கு ஏற்ப எண்ணெய் விலை நிர்ணயிக்கப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து நேரடியாக கடலை, எள், ஆமணக்கு, தேங்காய் போன்ற மூலப்பொருட்களை வாங்குகிறோம். சுத்தமாக இருப்பதால் பலரும் எங்களிடம் நேரடியாக எண்ணெய் வாங்கிச் செல்கின்றனர். மோகனூர் மட்டுமின்றி கரூர், திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூரிலிருந்தும் எண்ணெய் தயாரித்துத் தரச் சொல்லி ஆர்டர்கள் வருகின்றன” என்றார்.

**மேலும் சில புதுமைகள்**

காலத்துக்கு ஏற்ப மாற்றம் செய்துகொண்டால் வெற்றி நிச்சயம் என்பதை உணர்த்தும் வகையில் செயல்படும் விவசாயி வடிவேல், தன் வயலில்

கடந்த எட்டு ஆண்டுகளாகச் செயற்கை உரங்களைத் தவிர்த்து இயற்கை உரங்களை பயன்படுத்தி வருகிறார். தவிர, சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து, தானாக இயங்கும் அரிசி குத்தும் இயந்திரத்தையும் விவசாயி வடிவேல் தயாரித்து, பயன்படுத்தி வருகிறார்.

**விவசாயி வடிவேல் தொடர்புக்கு: 9442955622_**

## தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தொடரும் வாய்ப்பு

அரபிக் கடலில் உள்ள காற்று மேல் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் மழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தமிழகத்தில் தீவிரமடைந்துள்ளது. எனவே கடந்த சில தினங்களாக மாநிலத்தின் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. குறிப்பாக தென் மாவட்டங்களில் கன மழை பெய்திருந்தது.

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர், ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் 8 செ.மீ, கோவை மாவட் டம் சின்னகலாரில் 6 செ.மீ, நீலகிரி மாவட்டம் குன்னூர், தேனி மாவட்டம் கூடலூர், அரண்மனைபுதூர், திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு, கிருஷ்ணகிரி மாவட் டம் ஓசூர், திருநெல்வேலி மாவட்டம் சிவகிரி, ஆய்க்குடி உள்ளிட்ட இடங்களில் 4 செ.மீ, தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை, விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் உள்ளிட்ட இடங்களில் 3 செ.மீ மழை நேற்று முன் தினம் பதிவாகியுள்ளது.

தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்துக்கு கன மழை நீடிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அதன் பிறகு மழை படிப்படியாக குறையும்.

**வெயில் குறைந்தது**

அதிக மழை காரணமாக மாநிலத்தில் வெயில் சற்று தணிந்துள்ளது. மாநிலத்தில் ஒரு சில இடங்களில் சராசரி அதிகபட்ச வெயிலை விட

குறைவான வெயில் பதிவாகியிருந்தது. தமிழ்நாட்டில் நேற்று சென்னையில் 33.7 டிகிரி வெயில் பதிவானது. அதற்கு அடுத்து சேலத்தில் 32.9 டிகிரி, நாகப்பட்டினம் 32.1 டிகிரி, காரைக்கால் 32 டிகிரி, கடலூரில் 31.8 டிகிரி, கரூரில் 31.4 டிகிரி பதிவாகியது.___

விகடன்

**இலங்கையில் முதன் முறையாக 'மதுரை மல்லி' சாகுபடி!**

**யாழ்ப்பாணம்:** இலங்கையில் முதன் முறையாக மதுரை மல்லி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.



இலங்கையில் மலர் சாகுபடியை பெரிய அளவுக்கு முன்னெடுக்கும் திட்டமொன்று நாட்டின் வட பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிறப்பு அனுமதியுடன் மதுரை மல்லிச் செடிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மதுரையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மல்லைகைப் பூச்செடிகள், வவுனியாவிலுள்ள பண்ணை ஒன்றில் வர்த்தக ரீதியில் நடப்பட்டுள்ளன. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் நோக்கில், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரக

அலுவலகத்தின் முயற்சியில், உள்ளூர் வர்த்தகர் ஒருவர் இதில் இறங்கியுள்ளார்.

இலங்கையில் மலர்களுக்கான தேவை அதிகமாக இருந்தாலும், அதற்கான உற்பத்தி வர்த்தக ரீதியில் இல்லாத குறை உணரப்பட்டதாலேயே இந்த புதிய முயற்சி முன்னெடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.



மதுரையில் மல்லிகை சாகுபடியில் நல்ல அனுபவம் கொண்டவர்களின் உதவியுடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இந்த மல்லிகைப் பண்ணையை ஏற்படுத்தியுள்ள உள்ளூர் வர்த்தகர் பிரேமந்திரராஜா தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், மல்லிகை சாகுபடியில் ஆர்வம் காட்டினால் தேவையான உதவிகள் செய்யப்படும் என இந்தியத் துணைத் தூதர் நடராஜன் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்துக்காக இந்தியாவிலிருந்து 30,000 மதுரை மல்லிகைச் செடிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## வெப்பச் சலனத்தால் சென்னையில் மழை நீடிக்கும்: வானிலை மையம் தகவல்



சென்னை, அக். 3–

சென்னையில் கடந்த சில நாட்களாக வெயில் சுட்டெரித்த நிலையில் நேற்றிரவு நகரின் பல பகுதிகளில் திடீரென மழை பெய்தது.

கோயம்பேடு, மயிலாப்பூர், அடையார், அம்பத்தூர், ஆவடி, பட்டாபிராம், பூந்தமல்லி, குன்றத்தூர், தாம்பரம், குரோம்பேட்டை, பல்லாவரம், ஆலந்தூர், கிண்டி உள்பட பல பகுதிகளில் 1 மணி நேரம் பரவலாக மழை பெய்தது.

காற்றுடன் மழை பெய்ததால் அம்பத்தூர் ராஜீவ்நகர், பானுநகர், முகப்பேர், எழும்பூர், கீழ்ப்பாக்கம் உள்ளிட்ட இடங்களில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன.

விடிய விடிய மழை தூறல்கள் விழுந்தபடி இருந்ததால் மழைநீர் ஆங்காங்கே தேங்கி கிடந்தது. இன்று காலையிலும் விட்டு விட்டு மழை

பெய்தது. நுங்கம்பாக்கத்தில் 27.4 மி.மீட்டர் அளவுக்கு மழை பதிவாகி இருந்தது.

இரவில் வெப்பச்சலனம் காரணமாக மழை பெய்ததாகவும், இன்றும் இடியுடன் கூடிய மழையை எதிர்பார்க்கலாம் என்றும் வானிலை மைய அதிகாரிகள் கூறினர்.

## கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல் போக நெல் அறுவடை பணி தீவிரம்



கம்பம், அக். 3–

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல் போக நெல் அறுவடை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தேனி மாவட்டத்தில் முல்லைப் பெரியாறு அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரைக் கொண்டு 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பளவில் கோடை, சம்பா என இரு போக நெல் விவசாயம் நடைபெற்று வருகிறது.

முதல் போக விவசாயத்திற்காக கடந்த ஜூன்–2 ந் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது கம்பம் பகுதியில் கதிர்கள் முற்றி அறுவடை பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதே போல் வீரப்ப அய்யனார் குளம், கூடலூர் வெட்டுக்காடு, சட்ரஸ் ஆகிய பகுதிகளிலும் அறுவடை பணிகள்

நடந்து வருகிறது. மற்ற இடங்களில் கதிர்கள் தள்ளிய நிலையிலும் புகையான நோய் தாக்கப்பட்டும் உள்ளது.

இதனையடுத்து 2–ம் போகத்திற்கு நாட்றாங்கால் அமைக்கும் பணி நடைபெறும். தற்போது முல்லைப் பெரியாறு அணையில் நீர் மட்டம் குறைவாகவே இருப்பதால் 2–ம் போக விவசாயத்திற்கு போதுமானதாக இருக்குமா என விவசாயிகளிடம் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பருவ மழை கைகொடுத்தால் மட்டுமே அணைக்கு நீர் வரத்து அதிகரிக்கும். தற்போது முழு வீச்சில் முதல் போக அறுவடை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இவ்வாண்டு விவசாயிகள் எதிர்பார்த்த அளவு பருவ மழை பெய்ததால் தண்ணீர் பற்றாக்குறையின்றி கடந்த சில மாதங்களுக்கு முன்பாக முதல் போக நெல் நடவு செய்யப்பட்டு தற்போது கடந்த சில தினங்களாக கம்பம், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இயந்திரங்கள் மூலம் அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகள் எதிர்பார்த்த அளவு விளைச்சல் இல்லாததாலும் போதிய விலை கிடைக்காததாலும் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், தற்போது மதுரை, விருதுநகர், தஞ்சாவூர், அருப்புக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மொத்த வியாபாரிகள் 60 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை ரூ. 820 வரை கொள்முதல் செய்து எடுத்து செல்கின்றனர். இது விவசாயிகளுக்கு போதுமானதாக இல்லை. மூட்டை ரூ. ஆயிரத்திற்கு மேல் விற்பனை செய்யப்பட்டால் மட்டுமே போதிய லாபம் கிடைக்கும் என்றனர்.

## தேனி மாவட்டத்தில் தொடர் மழை: 50 அடியை எட்டிய வைகை அணை நீர் மட்டம்



கம்பம், அக். 3–

தேனி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக வைகை அணை நீர் மட்டம் இந்த ஆண்டில் 2–வது முறையாக 50 அடியை எட்டியுள்ளது.

தென் மேற்கு பருவ மழை தொடங்கி வரும் இந்நேரத்தில் தேனி மாவட்டத்திலும் முல்லைப் பெரியாறு அணையின் நீர் பிடிப்பு பகுதியிலும் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் ஓரளவு மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வைகை அணையின் நீர் மட்டம் கடந்த ஆண்டு அதிக பட்சமாக 55 அடி வரை மட்டுமே உயர்ந்தது. இந்த அணையின் தண்ணீரும் குடிநீர் பயன்பாட்டுக்காக அதிக அளவு திறக்கப்பட்டதால் 35 அடியாக குறைந்தது.

கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக வைகை அணையின் நீர் மட்டம் மீண்டும் 50 அடியை நெருங்கியுள்ளது.

போடி கொட்டக்குடியாறு, தேனி முல்லையாறு, வருஷ நாடு வைகை ஆறுகளில் நீர் வரத்து ஏற்பட்டு வைகை அணைக்கு அதிக அளவு தண்ணீர் வந்த வண்ணம் உள்ளது.

இன்று காலை நிலவரப்படி வைகை அணை நீர் மட்டம் 49.44 அடியாக உள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் இன்று அணையின் நீர் மட்டம் 50 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணைக்கு 987 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 60 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

பெரியாறு அணையின் நீர் மட்டம் 116.40 அடியாக உள்ளது. அணைக்கு 923 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 511 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மஞ்சளாறு நீர் மட்டம் 54 அடி நீர் வரத்து 92 கன அடி. சோத்துப்பாறை நீர் மட்டம் 96.43 அடி. நீர் வரத்து 15 கன அடி. திறப்பு 3 கன அடி.

பெரியாறு 3.6, தேக்கடி 4.6, உத்தமபாளையம் 5.2, கொடைக்கானல் 9.4 மி.மீ மழை அளவு பதிவாகியுள்ளது.